# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு VII

**பகுதி 1**

Kerala Reader - Tamil (AT)
Standard VII
Part - 1

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை


தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2024**

ST-327-1-TAMIL(AT)-7-VOL-1

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
    திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
    உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
    தவ சுப ஆசிச மாகே
    காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
    ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

### தமிழ்

### 7

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

மொழி ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டுமல்ல; அது நம் விழிக்குச் சமமானது. நாம் அன்றாடம் பயின்று வரும் மொழியில் குறிப்பாகத் தாய்மொழியில் பேசுவதற்கும் படிப்பதற்கும் எழுதுவதற்குமான அடிப்படை மொழியாற்றலை மட்டும் பெற்றிருந்தால் போதாது. மொழியின் அமைப்பு, ஆற்றல், நுணுக்கங்கள், அழகு, இனிமை, பழமை, வளமை இவற்றையும் அறிந்திருக்கவேண்டும்.

மொழியின் முக்கியமான ஓர் ஆற்றல், அது நம்மைக் கற்பனையுலகின் கண்ணெட்டா தூரத்திற்கும் அழைத்துச் செல்லும் என்பதாகும். மொழிக் கல்வியானது படைப்பாற்றல் கொண்ட மாணவர்களுக்கு ஓர் உந்து சத்தியாக இருக்கட்டும். சிலரது மொழி நடையே அவர்களை அடையாளம் காட்டிவிடுவதுண்டு. நாமும் நமக்கென ஒரு மொழிநடையை உருவாக்கப் பயிற்சி பெறுவோம்.

பாடநூல் என்பது அச்சடித்த தாள்களின் தொகுப்பு அல்ல; அதற்குள் நல்ல ஆசிரியர்கள், அறிவியலாளர்கள், தத்துவ மேதைகள், வாழ்க்கைக்கான வழிகாட்டிகள், கூடிப் பழகும் நண்பர்கள் முதலானோர் மறைந்திருக்கிறார்கள் என்றே சொல்லலாம். பாடநூல் நமக்குப் பயனுடையதாகவும், நாம் உட்பட்ட சமூகத்தின் இன்ப துன்பங்களில் கலந்துகொள்ளச் செய்வதாகவும், நாம் வாழும் நாட்டின் மேம்பாட்டில் ஈடுபடத் தூண்டுவதாகவும் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நல்லாசிரியர்களின் உதவியுடன் நாமே நம் அறிவை ஆக்கிக்கொள்ளத் துணைபுரியவேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மொழிப் பாடநூல் உங்கள் சிந்தனையைச் செழிப்படையச் செய்யட்டும்

வாழ்த்துகள்

**முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - VII - AT (Part 1)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Hepsy Rose Mary, A.**
Associate Prof. Dept. of Tamil, University of Kerala, Kariavattom.

### Experts

**Dr. Benedy**, **K.**
Asst. Prof., Tamil, Govt. Art College, Thiruvananthapuram.
**Dr. Nisha Raffi**,
Associate Prof., (Rtd.), University College, Thiruvananthapuram.
**Dr. Prabhakaran, U.**
Former Professor, Tamil, University Thanjavur.

### Members

**Aji Prakash, M.H.**, UPST, GHS, Koovakkad, Kollam.
**Anand, C.**, PD Teacher, GVHSS & TTI, Kumily, Idukki.
**Arockia dhas, R.**, PD Teacher, GTHS, Mattathukad, Palakkad.
**Christu dhas, C.**, PD Teacher, Govt. Tamil VHSS, Chalai, Thiruvananthapuram
**Dhanalekshmy, S.**, UPST, Govt. TTI, Kollam.
**Jeyakumar, T.K.**, UPST, Govt. Tamil HSS, Chalai, Thiruvananthapuram.
**Dr. Jeevalatha, S.**, HSST Tamil, Govt. Tamil HSS Chalai, Thiruvananthapuram.
**Manikandan, G.**, UPST, Govt. HSS, Anakkara, Idukki.
**Mohanadoss, G.**, HM (Rtd.), GTLPS, Edamalakudy, Munnar, Idukki.
**Suprabha, S.**, PD Teacher, GVGHSS, Chittur, Palakkad.
**Wilsent, K.**, UPST, LMS Tamil HS, Parasala, Thiruvananthapuram.
**Bimal Kumar**, Drawing Teacher, Anchalamoodu, Kollam.
**Joban,** Artist, Nalanchira, Thiruvananthapuram.
**Premjith Sureshbabu**, Nelolpana, Pakaloor, Thiruvananthapuram.
**Santhosh, K.,**, Drawing Teacher, GHS, Neduva, Malappuram.

Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்

1. புத்தம் புது பூமி ........ 7 – 28
சுற்றுப்புறமும் மாசடைதலும் ........ 8 – 15
நகரமயமாதல் ........ 16 – 21
சுற்றுச்சூழல் பாதுகாப்பு ........ 22 – 28

2. பேதமில்லா உலகம் ........ 29 – 50
பொன்னுலகம் செய்திடுவோம் ........ 30 – 36
ஊனம் ஒரு தடையல்ல ........ 37 – 43
முகவரி தேடும் கிராமங்கள் ........ 44 – 50

3. உழைப்போம் உயர்வோம் ........ 51 – 69
கைத்திறனில் கலையழகு ........ 52 – 58
செய்யும் தொழிலே தெய்வம் ........ 59 – 63
நவீனத் தொழில்கள் ........ 64 – 69

அகரமுதலி ........ 70

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

## அலகு 1

# புத்தம் புது பூமி




தத்தி வரும் காற்றும், துள்ளிக் குதிக்கும் அருவிகளும், உருண்டோடும் மேகக் கூட்டங்களும், பாடித் திரியும் பறவைகளும் இயற்கை அன்னையின் வரப்பிரசாதங்கள். இயற்கையோடு இணைந்த வாழ்வை மனிதன் என்று மறந்தானோ அன்று சுற்றுச்சூழல் மாசடைந்தன.



## இயற்கையைக் காப்போம்

இயற்கையன்னை மடிதன்னில் தவழ்ந்தி ருந்தால்
இன்றளவும் பாதுகாப்பாய் அமைந்தி ருக்கும்
வயலெல்லாம் மழைநீரால் செழித்தி ருக்கும்
வற்றாமல் ஏரிகுளம் நிறைந்தி ருக்கும்
புயல் வந்து தாக்கினாலும் வெற்பும் காடும்
புறம்விரியும் குடைபோல காத்தி ருக்கும்
அயலாகிப் போனதெல்லாம் இயற்கை தன்னை
அழித்ததனால் குற்றுயிராய் ஆன துலகு!

வீசுகின்ற காற்றினிலே நஞ்சதைச் சேர்த்தும்
விடும்மூச்சைத் தூய்மையாக்கும் மரத்தைச் சாய்த்தும்
காசுக்கு மலைகளினைத் தகர்த்தே விற்றும்
உருகலைத்தல் போல்மணலை அள்ளிப் போட்டும்
மாசுக்கே சுற்றுப்புறம் பட்டா செய்தும்
மாவெப்பம் ஏற்றிஓசோன் ஓட்டை செய்தும்
பூசுகின்ற ஒப்பனையால் முகம்மாற் றல்போல்
பூமியினை மாற்றிட்டோம் செயற்கைப் பூச்சால்!

புதுஉரத்தால் தாய்மண்ணின் உயிர்ப றித்தும்
பூச்சிக்கொல்லி மருந்தடித்து நோய்கள் பெற்றும்
மதுசுரக்கும் மலருக்கும் காய்க றிக்கும்
மரபுமாற்றும் ஊசிபோட்டுச் சுவைகெ டுத்தும்
முதுமையிலும் திடமான உடல்ந லத்தில்
முன்னோர்கள் இருந்ததினைக் கனவாய் ஆக்கி
பொதுவென்னும் இயற்கையினைக் காத்தி டாமல்
போயழித்தே துடிக்கின்றோம் அறிவி ருந்தும்!

– பாவலர் கருமலைத் தமிழாழன்

உலகச் சுற்றுச்சூழல் தினம் ஜூன் 5

### ஆசிரியர் குறிப்பு



பாவலர் கருமலைத் தமிழாழன். இவரது இயற்பெயர் கி. நரேந்திரன். மரபுக் கவிதைகள் எழுதுவதில் வல்லவர். இவர் தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் விருது பெற்றவர். இவர் இயற்றிய நூல்கள் மரபின் நூல்கள், வீணை மத்தளமாகிறது முதலானவை.

### செயல்பாடுகள்

- பாடலைக் குரல் ஏற்றத்தாழ்வுடன் பாடி மகிழுங்கள்.
- பாடலில் வருகின்ற எதுகை, மோனை சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- பிரித்தெழுதுங்கள்
  - வயலெல்லாம் – வயல் + எல்லாம்
  - தூய்மையாக்கும் –
  - இயற்கையன்னை –
- உங்களுக்குப் பிடித்த கவிதை வரிகளையும் அதற்கான காரணத்தையும் எழுதுங்கள்.
- பாடல் வரிகளை முறையாக எழுதுங்கள்.

  மழை நீரால் வயலெல்லாம் செழித்திருக்கும்
  காத்திருக்கும் புறம் விரியும் குடைபோல
  காய்கறிக்கும் மலருக்கும் மது சுரக்கும்

## நெகிழியில்லா உலகம்

'நெகிழி' உலகையே தன் கட்டுபாட்டுக்குள் வைத்துள்ளது. சிறிய அளவில் தொடங்கிய நெகிழியின் பயணம் மக்கள் வாழ்வில் ஓர் அங்கமாகி சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு மிகப்பெரிய காரணமாக அமைந்துவிட்டது. அதிலிருந்து விடுபட்டு 'தூய்மை இந்தியா உருவாக்குவது மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்பதுபோல காலதாமதமாகவே அரசு

நெகிழியின் ஆபத்தை உணர்ந்து தடை செய்ய முன்வந்துள்ளது. இதற்கு ஒவ்வொரு தனிமனிதனின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமாகும்.

1862–இல் முதன்முதலில் 'செல்லுலோஸ்' என்ற பொருளில் செய்யப்பட்ட பொருள்கள் பயன்பாட்டிற்கு வந்தது. 1933–இல் பாலிதீன் எனப்படும் 'பாலி எத்தீன்' எனும் நெகிழி உருவாக்கப்பட்டது. இதுதான் இன்று மிக அதிகமாகப் பயன்படுத்தும் பொருளாகும். இதுவே நீர், நில மாசுபாட்டிற்குக் காரணமாக அமைந்து பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது.



நெகிழி மற்ற பொருள்களைக் காட்டிலும் விலை மலிவாகக் கிடைக்கிறது. எடையின்றி உள்ளது. உடையாமல் இருப்பதோடு துருபிடித்தல் போன்ற எந்த வேதிமாற்றத்திற்கும் உட்படாதது. மேற்கண்ட காரணங்களால் மக்களின் வரவேற்பைப் பெற்று பயன்பாட்டுப் பொருட்களில் முதலிடத்தைப் பிடிக்கிறது. இதனால் 50 ஆண்டுகளில் நெகிழியின் பயன்பாடு மின்னல் வேகத்தில் அதிகரித்து விட்டது.

நெகிழியால் சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகம் ஏற்படுகிறது. ஒருமுறை பயன்படுத்திவிட்டு வீசி எறியும் தேநீர் கோப்பை, நெகிழிக் கைப்பைகள் சரியான முறையில் அகற்றப்படாததால் கால்வாய்களின் அடைப்புக்கும்

காரணமாகிவிடுன்றன. மக்களின் பொறுப்பற்ற செயலால் ஆறு, ஏரி, குளம், கண்மாய் என அனைத்து நீர் நிலைகளும் குப்பைகளாகக் காட்சியளிக்கின்றன. இதனால், நீர் மேலாண்மை அதிக பாதிப்பைச் சந்திக்கிறது; செயலற்ற நிலையில் உள்ளது.

நெகிழிக் கழிவு மேலாண்மை

- குறைந்த பயன்பாடு
- மறு பயன்பாடு
- மறு சுழற்சி

நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்திய பிறகு மறுசுழற்சி செய்வதாலும், நெகிழியை எரிக்கும் கருவிகள் மூலம் எரிப்பதாலும் காற்று மாசுபாடு அதிகரிக்கவே செய்கிறது. எனவே ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். அதாவது அதன் உற்பத்தியையே நிறுத்த வேண்டும்.

இவ்வுலகம் நெகிழியை முற்றிலுமாகத் தவிர்க்க முடியாத சூழலில் உள்ளது. எனவே, மாற்று வழி கண்டறியும் வரை நீண்ட கால பயன்பாட்டைத் தரும் நெகிழியை மட்டும் பயன்படுத்த வேண்டும். இலை, சணல், காகிதப்பை, கண்ணாடி, துணி. பாக்குமட்டை, எவர்சில்வர் பொருட்கள், மரச்சாமான்கள் ஆகியவற்றை நெகிழிக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம். பிளாஸ்டிக் இல்லா உலகம் கொண்டுவருதல் எளிதல்ல. ஆனால், முயன்றால் முடியாதது இல்லை. நெகிழிப் பயன்பாடுகளின் வளர்ச்சி சுமார் 50 வருடம் மட்டுமே. அதற்கு முன் உலகம் இயங்கவில்லையா என்ன? எனவே, நெகிழியின் தீமையை உணர்ந்து பின்வரும் தலைமுறைகளுக்குத் தீங்கு செய்வதை அடியோடு நிறுத்திட வேண்டும். மாற்று வழிகள் ஆயிரமுண்டு. செலவு அதிகம் என்றாலும் தீமையில்லா, நீண்ட காலம் உழைக்கும் மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

பல வகையான நெகிழிப் பொருட்களுக்கு அரசு தடை உத்தரவு பிறப்பித்தது. அரசு ஆணையை மீறுபவர்களுக்கு அபராதமும், சிறை தண்டனையும் விதித்துள்ளது. மக்கள் சுயநலம் நீக்கி பொதுநலம் கொண்டு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அக்கறையோடு செயல்பட வேண்டும்.முதலில் நெகிழியைத் தவிர்ப்போம். பின்னர் நிரந்தரமாக ஒழிப்போம்.




– இரா. கீதா

## செயல்பாடுகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை கண்டுபிடியுங்கள்.**

- 'பாலிதீன்' எனும் வார்த்தை எந்தச் சொல்லைக் குறிப்பிடுகிறது?
- முதன் முதலில் பாலிதீன் பை உருவாக்கப்பட்ட வருடம் எது?
- நெகிழியினால் ஏற்படும் தீமைகளை எழுதுங்கள்?
- சுற்றுப்புற மாசடைதலுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முத்திரை வாக்கியங்கள் தயாரியுங்கள்.

  தவிர்ப்போம் தவிர்ப்போம்
  நெகிழியைத் தவிர்ப்போம்

- உங்கள் வீட்டில் காணப்படும் நெகிழிப் பொருட்களின் பெயர்களை எழுதுங்கள்.
- நெகிழியைத் தவிர்க்க என்னென்ன செய்யலாம்? ஒரு குறிப்பு தயாரியுங்கள்.

## ஏன்? எப்படி? எப்போது?

ஒரு நாள் காலையில், நான் எழுந்து பார்த்தேன், பறவையின் சத்தம் இல்லை.

வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தபோது மரங்கள் இல்லை.. ரோஜாச் செடி கூட இல்ல

நான் மாடிப் படிக்கட்டுகளில் வேகமாக ஓடினேன், நகரில் எங்குமே மரங்கள் இல்லை.. அந்த நேரத்தில், "நாட்டில் மரங்களைக் காணவில்லை" என்று டி.வி.யில் ஒரு 'பிரேக்கிங்' நியூஸ் ஒளிபரப்பப்பட்டது. விஞ்ஞானியுடன் முதல்வர் ஆலோசனை செய்கிறார் என்று.. எனக்கு வருத்தமாக இருந்தது... என்ன இப்படி ஆயிடிச்சு. மரங்கள் இல்லாமல் நம்மால் வாழ முடியுமா..?

நான் கேட்டேன் "அப்பா! நாம போலீஸ் ஸ்டேஷன் போய் புகார் கொடுப்போமா" என்று..

அப்போது அம்மா சொன்னாள் "புகார் கொடுக்க வேண்டாம்"னு..


ஒட்டுமொத்த மக்களும் அச்சத்தில் இருந்தாங்க.

பின்னர் முதல்வர் விஞ்ஞானிகளுடன் பிரச்சினைகளைக் கண்டறிய விவாதித்து வருவதாக மற்றொரு செய்தி ஒளிபரப்பானது.

நாங்க எல்லோரும் டிவியைப் பார்த்துகிட்டு இருந்தோம்.

அப்போது திடீரென ஒரு வேப்ப மரம் மீட்டிங் ஹாலுக்கு வந்தது.

எல்லோருக்கும் அதிர்ச்சி.. எப்படி வந்துச்சு?



அப்போ.. மரம் தனது பேச்சைத் தொடங்கிச்சு.

"எங்கள் அரசர் அரச மரம் உங்களுக்கு ஒரு செய்தி அனுப்பி உள்ளார்.

"என்ன செய்தி?" என ஆராய்ச்சிக் குழு கேட்டாங்க. மரம் சொல்லுச்சு "இனிமே நாங்க யாரும் இங்க இருக்க மாட்டோம்."

உடனே ஒரு நபர் எழுந்துநின்று என்ன சொல்றிங்க.? எதுக்கு இங்க இல்ல நீங்க.

மரம் சொல்லுச்சு "நாங்க உங்களுக்குப் பழம், காய், நிழல், காற்று, மழை எல்லாம் கொடுத்தோம். ஆனா நீங்க எங்களை வெட்டுறீங்க... நாங்க பொது நலம் விரும்பி.. நீங்க சுயநலமே முக்கியம் என்று இருக்கிங்க. இனிமேல் உங்க மாநிலத்தில் மரம், செடி, கொடி, புல் என எதுவும் இருக்காது."

எல்லோரும் பயந்து போய் "ப்ளீஸ் போகாதீங்க... நீங்க இல்லாம வாழ முடியாது" என்று சொன்னாங்க."

"நீங்க மட்டும் தமிழ் படிக்கல.. நாங்களும் தமிழ் படித்திருக்கோம் 'மதியாதார் தலைவாசல் மிதியாதே!' எங்களை மதிக்கும் ஜாதவ் பயேங் சுற்றுச்சூழல் ஆர்வலர். இவர் பிரம்மபுத்திரா நதி அருகே ஒரு வனத்தையே உருவாக்கியுள்ளார். அங்கே போகிறோம்"

எல்லோரும் "ப்ளீஸ், போக வேண்டாம்" என்று சொன்னாங்க.

மரம் சொல்லுச்சு "எங்க ராஜா சொன்னாரு, நீங்க செடி, மரம் நட்டு வளர்த்து காண்பிங்க; அடுத்த முறை எங்கள் தூதுவர் வருவார். ஒரு சின்னக் கேள்வி, கடைசியா எப்போ மரம் வெட்டும்போது பாத்திங்க.." உடனே எல்லோரிடமும் "இன்னைக்கு, நேற்று, அப்டி"னு பல குரல் வந்தது.

மரம் அடுத்த கேள்வி கேட்டுச்சு "கடைசியா எப்போ மரம் நட்டிங்க?"

ரெண்டு குரல் மட்டும் கேட்டுச்சு. பெரிய மௌனம்.

"உங்கள் மௌனம் எங்கள் அவமானம்" என்று சொல்லிட்டு மரம் பறந்து போயிடுச்சு

எல்லாரும் தலை குனிந்து நின்றனர். தங்களின் தவறை உணர்ந்தனர். அரசும் மக்களும் எழுத்தாளர்களும் சமூக ஆர்வலர்களும் களத்தில் இறங்கினர்.

கேரள மாநிலத்தின் மரம் தென்னை

இந்தியாவின் தேசிய மரம் ஆலமரம்

பள்ளிக்கூடத்தில் மரம் வைக்கவும், அதனை வளர்க்கவும் பயிற்சி கொடுக்கப்பட்டது. நம்மாழ்வார் அவர்களின் அருமையும் பெருமையும் மெல்ல மெல்ல இளைய தலைமுறைக்குப் புரிய ஆரம்பித்தது.

இளம் வயதினர் தினமும் ஊர் முழுவதும் மரம் நட்டு, காப்பாற்றி வந்தனர் .



மறுபடியும் வேப்ப மரம் நிலைமையைப் பார்க்க வந்தது. மக்களின் மன மாற்றம் அதற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. செய்தி அரசர் காதுக்கு எட்டியது. உடனே எல்லா மரங்களும் செடிகளும் பழைய இடத்திற்கே வந்தன. மறுநாள் காலை மக்கள் கண்விழித்துப் பார்த்த போது மகிழ்ச்சி அடைந்தனர். இப்போது தமிழ் மக்கள் அனைவரும் மரம், செடி, கொடிகளைத் தன் உறவினர் போல நினைத்துப் பழகினார்கள். நானும் என் வீட்டில் உள்ள மரத்திடம் பேசிக் கொண்டு வீட்டுப் பாடம் எழுதிக்கொண்டு இருக்கிறேன்.

– சூடாமணி




## செயல்பாடுகள்

- கதையை வாசித்து உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.

- கதையில் கூறப்படும் மரங்களின் பெயர்களை வாசித்துக் கண்டுபிடியுங்கள்.
- மரங்களினால் ஏற்படும் நன்மைகள் எவை? என்பதைக் கலந்துரையாடி குறிப்பெழுதுங்கள்.
- கதையை வாசித்துப் பொருள் புரிந்து நடித்துக் காட்டுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த மரங்களின் பெயர்களையும் சிறப்புகளையும் அட்டவணைப்படுத்துங்கள்.

**உலகச் சுற்றுச்சூழல் தினம்**

| | | |
|---|---|---|
| நாள் | : | ஜூன் – 5 |
| இடம் | : | அரசு உயர்நிலைப் பள்ளி அம்பநாடு |
| நேரம் | : | காலை 10 மணி |
| தொடங்கி வைப்பவர் | : | கிராம பஞ்சாயத்து உறுப்பினர் |

சுற்றுச்சூழல் தின அணிவகுப்பு மற்றும் மரக்கன்று நடுதல்

**அனைவரும் வருக!** **ஆதரவு தருக!**

- மேலே கொடுக்கப்பட்டுள்ள சுவரொட்டியைப் போன்று உங்கள் பள்ளியில் நடைபெறும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு வகுப்பிற்கான ஒரு சுவரொட்டி தயாரியுங்கள்.

✍ சுற்றுச்சூழல் மாசடைதலுக்கான காரணங்களைக் குறித்து ஒரு குறிப்பெழுதுங்கள்.

✍ சுற்றுச்சூழல் மாசடைதலைத் தடுக்க நீங்கள் கூறும் கருத்துகளை எழுதுங்கள்.



# நகரமயமாதல்



## சூழலியல் ஹைக்கூ

'மழை அழகு தான்
வீடு
ஒழுகாத வரை'

'குளிர்ந்த காற்று
சொன்னது செய்தி
தூரத்து மழை.'

"சுற்றுச்சூழல் கேடுகளாய்
பேருந்தில் விற்பனையாகும்.
தூய காற்றுப் பை.'

'கரிசல் காட்டில்
கலர்ப்பஞ்சு வெடிக்கிறது
சாயத்தண்ணீர் கலப்படம்.'

'விளைநிலமெங்கும்
கான்கிரீட் காடுகள்
ஏக்கத்துடன் மாடுகள்.'

'கல்மனசுக் காரர்கள்
பாருங்கள்
பாறைகளை உடைக்கிறார்கள்.'

'மண்புழுவைத் தேடிப் போவான்
மீனவன்
செத்து மிதக்கும் மீன்கள்.'

'எரியும் புகை
மூச்சடைக்கும் துர்நாற்றம்
சூழல் பாதிப்பு.'

– அன்பாதவன்

## செயல்பாடுகள்

- காற்று, மழை, நிலம் எனும் தலைப்புகளில் ஹைக்கூ எழுதுங்கள்.
- 'சுற்றுச்சூழல் கேடுகளாய்..' என்ற கவிதை வரிகளின் கருத்துகளைக் கூறுங்கள்.
- 'விளைநிலமெங்கும்...' என்று தொடங்கும் கவிதை வரிகளின் கருத்துகளை எழுதுங்கள்.

## பூமியைக் காப்போம் !

உலகப் புவி தினம் – ஏப்ரல் 22

மனிதா ! மனிதா ! பூமியைக் காத்திடு !
மாறுதே தட்ப வெப்பம் உணர்ந்திடு !
இனியும் பொறுப்பு இல்லா திருந்தால்
இயற்கை உன்னை வெறுத்து ஒதுக்கும்
இமய மலையின் பனிநிறை ஆறுகள்
இயல்பில் மாறியே இல்லா தழிந்திடும்
சமயம் வாய்த்த தென்று எண்ணியே
சூழலைக் காத்து சுகமாய் வாழ்வோம்!

ஆர்க்டிக் பிரதேசம் அண்டார் டிக்பகுதி
பனிநிறைப் பகுதிகள் பண்பை இழந்து
நீராய் மாறியே நிலத்தை நிறைத்திடும்
தீவுகள் எல்லாம் திடுமென மறைந்திடும்
புகைகள் எல்லாம் பூமியை அழித்து
புன்னகை மாற்றி புண்பட வைத்திடும்
பகைவர் எவரும் படைஎடுக் காமலே
புகைதான் ஓசோன் படலத்தைத் துளைக்கும்



பூமியில் வெப்பம் ஒவ்வொரு ஆண்டும்
புதுப்புது நிலையில் உயர்வ தனாலே
பூமியில் வாழ்ந்திடும் உயிர்கள் யாவும்

அடைந்திடும் துன்பம் அளவிலாத் துன்பம்
நீர்நிலை அனைத்தும் நீங்கா மாசால்
நிறைந்து வாழ்வை அழித்திடும் திண்ணம்
நீரால் மூன்றாம் உலகப் போரெதும்
ஏற்படா வகையிலே பூமியைக் காப்போம்!

– புலவர் புதுவை இளங்குயில்

## செயல்பாடுகள்


- எதுகை, மோனை சொற்களைக் கண்டறியுங்கள்.
- கவிதையை வாசித்துப் பொருள் எழுதுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

  வாய்த்ததென்று –

  திடுமென –
- வினாக்களுக்கு விடை கண்டுபிடியுங்கள்.
  - பொறுப்பு இல்லாதிருந்தால் என்ன நடக்கும் எனக் கவிதை கூறுகிறது?
  - நீர் நிலைகள் எப்படி மாசடைகின்றன?
  - புவி எப்படி வெப்பம் அடைகிறது?


## தண்ணீர்! தண்ணீர்!

தண்ணீர் வாங்கித் தொட்டியை நிரப்பும் ஒவ்வொரு முறையும் என் மகளுக்கும் தண்ணீர் கொண்டுவரும் லாரி ஓட்டுநருக்கும் இடையில் வாக்குவாதங்கள் இருக்கும். ஒவ்வொரு முறையும் நிரப்பும் தண்ணீருக்கான பணத்தை லாரி ஓட்டுநர் அதிகரித்து இருப்பான். அவன் கேட்கிற தொகையைக் கொடுத்தாக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திவிடுவான். அவன் பக்க நியாயத்தைப் பேருரையாக முன் வைப்பான். பக்கத்துக் கிராமங்களில் இருந்து தண்ணீர் எடுத்து வர முடிவதில்லை. நிலத்தடி நீர் குறைந்து போனதால் அந்தக் கிராம மக்கள் மறியலில் ஈடுபடுகிறார்கள். வரும் வழியிலேயே தண்ணீர் தீர்ந்துவிடுகிறது.



அந்த லாரி மூலம் கொண்டுவரப்படும் தண்ணீர் ஒவ்வொரு முறையும் கொண்டுவரும் இடம் மாறும். கிணறுகள் மாறும். தண்ணீரின் தன்மை, குறிப்பாய் உப்புத்தன்மை போன்றவை மாறும். இதையெல்லாம்

மனதில் கொள்ளாமல் தண்ணீரை உபயோகப்படுத்த வேண்டியிருக்கும். குளியல் மற்றும் குடிநீர் உபயோகத்திற்குத் தவிர இந்த லாரித் தண்ணீர் பயன்படுத்தப்படும்.



குடிநீருக்குப்பதினைந்து நாட்களுக்கொருமுறை குழாயில் வரும் தண்ணீருக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கும். மினரல் வாட்டர் நிரப்புவதற்காகப் பதினைந்து கி.மீ. தள்ளி நகரத்திற்கு ஓட வேண்டியிருக்கும். சிறுவாணித் தண்ணீரின் சுவை நாக்கில் மிச்சமிருக்கும். நிலத்தடி நீரை நம்ப முடியாதபடியாகிவிட்டது. மொத்தத் தண்ணீர் இருப்பில் 0.5 சதவீதமே நிலத்தடி நீர். அதைத்தான் மனித சமூகம் முழுக்கத் தனது வாழ்க்கைக்குப் பயன் படுத்துகிறது. பாதி சதம் மக்கள் குறிப்பாக ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளில் வாழ்பவர்கள் தண்ணீர்ப் பிரச்சினையை உணர்கிற வகையில்தான் இருக்கிறார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் 2025 இல் பெரும் தண்ணீர் சிக்கலை எதிர்கொள்ளப் போகின்றன. அப்போது தாகச் சாவுகளும் சாதாரணமாய் நிகழும். கடந்த மூன்றாண்டுகளில் 30 லட்சம் மக்கள் தாகச்சாவால் உயிரிழந்திருக்கிறார்கள். ஒவ்வொரு இருபதாண்டிற்கும் உபயோகம் இரு மடங்காவதும், திகிலானதுதான்.

மழையைப் பெரிதாக நம்பியிருக்கிற இன்றைய சூழல் மாற்றப்பட வேண்டியதாகிறது. இந்தியாவில் தண்ணீர் கிடைக்காத கிராமங்களின் எண்ணிக்கை என்பது சுதந்திரம் பெற்றபோதும் அடுத்த பத்தாண்டுகளிலும் 250ஆக இருந்தது. 2002–இல் ஒரு லட்சம் கிராமங்கள் இப்பட்டியலில் வந்துவிட்டன. இப்பட்டியலில் இடம்பெறும் தகுதியுடைய கிராம மக்கள் ஒரு குடம் தண்ணீருக்காகக் குறைந்தது 7 கி.மீ. நடந்து சென்று தண்ணீர் கொண்டுவர வேண்டியிருக்கிறது.

ஒரு வருடத்தில் 275 நாட்கள் மழை பெய்கிற அந்தமானில் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. உலகின் அதிக மழைப் பொழிவு உள்ள சிராபுஞ்சியில் குடிநீர்த் தட்டுப்பாடு பல ஆண்டுகளாகவே உள்ளது. டெல்லி போன்ற நகரங்களில் ஓர் இடத்தில் இருந்து மாநகரின் இன்னொரு இடத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்லப்படும்போது பாதியளவு தண்ணீர் வீணாகிறது.

பழமையான இந்தியாவின் மழைப்பொழிவு உலக மழைப் பொழிவு அளவைவிட அதிகமாகும். 5 சதவீதம் தண்ணீர் மட்டும் இந்தியாவில் தொழிற்சாலை உபயோகத்திற்குப் பயன்படுகிறது. 82 சதவீதம் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. இது வரும் ஆண்டுகளில் விவசாய சீர்கேடுகள் காரணமாய் தொழிற்சாலை உபயோகத்திற்கு அதிகரிக்கும். விவசாய நிலங்களுக்கான தண்ணீர்த் தேவையைக்

குறைப்பது அல்லது முறைப்படுத்துவது முக்கியமானதாக இருக்கிறது. ஒரு கிலோ அரிசி, ஒரு லிட்டர் பாலின் விலை மினரல் வாட்டர் பாட்டிலின் விலையை விடக் குறைவாக இருக்கிறது.

மழைநீர் சேகரிப்பு முதற்கொண்டு கழிவுநீரை மீண்டும் பயன்படுத்துதல் வரைக்குமான பல்வேறு திட்டங்களால் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் களைந்துவிட்டு நதிகளை இணைப்பதும், மழை நீரைப் பெரிய அளவில் சேகரிப்பதும், விவசாய நீரை முறைப் படுத்துதலும் அவசியமாகிறது.



தண்ணீர்ப் பிரச்சினை என்பது தண்ணீரை முறையாகப் பயன்படுத்தத் தெரியாததாலும், திட்டமிடாததாலும் வருவதாகும் என்பதே நீண்ட நாளைய அனுபவ ஆராய்ச்சியின் மையமாக இருக்கிறது. மிகக் குறைந்த மழைப்பொழிவு உள்ள இஸ்ரேலில் விவசாயம் அபரிமிதமாக இருக்கிறது. தண்ணீர்ப் பஞ்சம் இல்லை. 1000 கன மழைப் பொழிவு உள்ள இந்தியாவில் தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது.

உலகத் தண்ணீர் தினம் – மார்ச் 22

தெருக்குழாய்களில் தண்ணீர் வரும் நேரம் திட்டமிடப்படாதபடி அமைந்துவிடுகிறது. நடுநிசிகளில் தூக்கத்தைத் தொலைத்துவிட்டு நீண்ட நேரம் காத்திருந்து தண்ணீர் பிடிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அவ்வாறு சிரமப்பட்டுக் கொண்டு வரும் தண்ணீர் குளியலறை மற்றும் கழிப்பறைகளில் கொட்டி வீணாக்கப்படுகிறது. கழிவு நீரை முறையாகச் சுத்திகரிப்பு செய்து மறு உபயோகப்படுத்தலுக்கு முன்பாகக் கழிப்பறைகளில் கொட்டப்படும் தண்ணீரின் அளவைக் குறைப்பதற்காக இருக்கும் திட்டமிடலில் அக்கறை கொள்ளலாம். இந்தத் திட்டமிடலின் அம்சங்கள், ஆரம்ப நிலையில் நிறைய முதலீட்டைக் கோருவதாகத் தோற்றமளிக்கும். ஆனால் அவையும் சரியாக முறைப்படுத்த சுலபமான வழிகள் தென்படலாம்.




பசுமைப் புரட்சியென்ற பெயரில் செயற்கை இரசாயன உரங்களால் நிலங்கள் பாழாக்கப்பட்டன. நகரமயமாக்கலின் பெயரில் பெரும்

ஏரிகள், குளங்கள், குப்பைகள், கழிவுகளால் நிரம்பிக் காணாமல் போகின்றன. அவற்றைக் கொட்டும் வாகன ஓட்டுநருக்கு ஏரிகள், குளங்களில் குப்பைகள் கொட்டப்படுவது சுலபமான வேலையாக அமைந்துவிடலாம். அந்த வேலையைக் குத்தகைக்கு எடுத்திருக்கும் ஒப்பந்தக்காரரும், ஒப்பந்தத்தைத் தரும் நகராட்சியும், அரசும் எல்லாவற்றையும் சாட்சியாக இருந்து வேடிக்கை பார்ப்பது துரதிர்ஷ்டமானது. கழிவைக் கொட்டும் வாகன ஓட்டுநரும் தனது வீட்டுக் குப்பைத் தொட்டியைக் காலி செய்ய இன்னொரு வாகன ஓட்டுநருக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

கிணறுகள் வற்றிப்போகிறபோதுதான் தண்ணீரின் அருமை தெரியும் என்பார்கள். நீர் மேலாண்மையில் 3R எப்போதும் முன்னிலைப் படுத்தப்படுவதுண்டு. Reduce, Recycle, Reuse என்பதுதான். பயன்படுத்தப்பட்ட தண்ணீரை மீண்டும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. தண்ணீரைப் பயன்படுத்தும்போது தண்ணீர் அதற்குத் தேவைதானா? என்ற முதற்கேள்வியை எழுப்பிக் கொள்ளலாம். இதில் தண்ணீர் சேமிப்பு உள்ளடங்கிவிடுகிறது. வீணாகும் தண்ணீரை மறு உபயோகம் செய்வதில் முதலீடும் கிடைக்கிறது. வீட்டு உபயோகப் பொருட்களில் தண்ணீரைப் பயன்படுத்துதலை வெகுவாகக் குறைப்பதற்காகப் பல்வேறு சாதனங்களும் உத்திகளும் வந்துவிட்டன. குறிப்பாகக் கழிப்பறைகளில் மற்றும் சமையலறைகளில் தண்ணீர் பயன்படுத்தப்படுவதன் அளவு குறைப்பது பற்றிய அக்கறையைப் பெண்களிடமிருந்து துவங்க வேண்டியிருக்கிறது.

– சுப்ரபாரதிமணியன்



## வாசிப்போம்; கண்டுபிடிப்போம்

- பூமியிலுள்ள தண்ணீரின் அளவில் நிலத்தடி நீரின் அளவு எவ்வளவு?
- சுதந்திரம் பெற்றபோது நமது நாட்டில் தண்ணீர் தட்டுப்பாடுள்ள கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை?
- தண்ணீர் தட்டுப்பாட்டைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டியவை எவை?
- **மனு கொடுக்கலாம்**

  உங்கள் பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு உள்ளதால் அப்பகுதியில் ஒரு பொதுக் குழாய் அமைத்துத் தருமாறு பஞ்சாயத்துத் தலைவருக்கு ஒரு கோரிக்கை மனு எழுதுங்கள்.
- தண்ணீர்ப் பிரச்சனை ஏற்படுவதற்கான காரணங்களைக் கலந்துரையாடி குறிப்பெடுங்கள்.
- விவசாய நிலங்களில் அதிகத் தண்ணீரை வீணாக்காமல் எவ்வாறு பயன்படுத்தலாம்?
- மழைநீரைச் சேமிக்கும் முறையைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு



உலகக் காற்று தினம் – ஜூன் 15

## காற்று

தேடித் தேடிப் பார்க்கிறேன்
    காற்றே உன்னைக் காண்கிலேன்;
ஆடி ஆடி நிற்பதேன்
    யாரும் காணும் மரமெல்லாம்?
கூடி ஆட்டி ஓடினும்
    காற்றே அங்கும் நிற்கிறாய்;
பாடிப் பாடி நிற்கையில்
    பாட்டாய் நீயே வருகிறாய்!

ஆய்ந்து ஆய்ந்து பார்க்கிறேன்
    ஆண்டவன் நிலையைக் காண்கிறேன்
மாயும் அலையுள் இருக்கிறாய்
    மாகடல் நின்றும் பிறக்கிறாய்
நேய விண்ணில் பறக்கிறாய்
    தேடும் மழையுள் இருக்கிறாய்
ஆயும் என்னுள் இருக்கிறாய்
    அலையும் மூச்சாய் வாழ்கிறாய்.

பேசிப் பேசிப் பகைக்கிறார்
    பேச்சாய் நின்றே அழுகிறார்

காசில் நெஞ்சம் மறக்கிறார்
காய்ந்து புகையாய் மாய்கிறார்
நேச நெஞ்சர் வாழ்கிறார்
நாளை மக்கள் வாழ்கிறார்
பேசும் யாவும் நீயன்றோ!
போற்றும் பயனே நீயன்றோ!

– புலவர் மி. காசுமான்

### ஆசிரியர் குறிப்பு



மி. காசுமான் குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர். சிறந்த கவிஞர், இலக்கண, இலக்கியப் புலமை பெற்ற ஆய்வாளர். முத்தாரம், கனவோ நினைவோ, தமிழ்க்காப்பு இயம் முதலானவை இவரது படைப்புகள். இளங்கோ விருது, தமிழ்ச்சுடர், கலைமணி, குறளாய்வுச் செம்மல், கபிலர் விருது போன்ற பல விருதுகளைப் பெற்றவர். இவர் 2022–ஆம் ஆண்டு அக்டோபர் 21 ஆம் நாள் காலமானார்.

### செயல்பாடுகள்

- அகர முதலியைப் பயன்படுத்திப் பொருள் கண்டுபிடியுங்கள்.
  விண்ணில் –
  காண்கிலேன் –
- பாடலை இராக தாளத்துடன் பாடுங்கள்.
- கவிதையை வாசித்து பொருள் அறிந்து அதனை உரைநடையாக எழுதுங்கள்.
- கவிதையை வாசித்து அதில் இடம்பெற்றுள்ள அடுக்குத்தொடர்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
  எ. கா – தேடித் தேடி
- கவிதையில் உங்களுக்குப் பிடித்த வரிகளையும் அதற்கான காரணத்தையும் கூறுங்கள்.

## தாவர தெய்வம்

**குறைந்தது பத்து மரக்கன்றுகளை நடுவேன்.**
**அவை கண்ணும் கருத்துமாக வளரக் கவனம் செலுத்துவேன்.**

கல்லூரி மாணவனான குமார் தன் நண்பர்களை எல்லாம் வீட்டிற்கு வரவழைத்து அவர்களுக்கு விருந்து பரிமாறினான். குமாரின் வீட்டில் அவன் நண்பர்கள் எல்லோரும் உணவருந்திக் கொண்டிருந்தார்கள்.

"குமார்! கத்தரிக்காய் பொரியல் மிகவும் சுவையாக இருக்கின்றது! வாழைக்காய் கூட்டோ அதைவிடவும் பிரமாதமாகயிருக்கின்றது. இதுவரையிலும் இப்படி சுவைமிக்க காய்களை நான் சாப்பிட்டதே யில்லை" என்றான் ஒரு நண்பன்.

அதனைக் கேட்டதும் "ஆமாம்! ஆமாம்!" என்று அனைத்து நண்பர்களும் தலையசைத்தார்கள்.

அதனைக்கண்டு குமார் மகிழ்ச்சியடைந்தான். "நண்பர்களே! இந்தக் காய்கள் எல்லாம் எங்கள் வீட்டுத் தோட்டத்தில்.விளைந்தவைதான்! இதோ எங்கள் தோட்டத்தில் விளைந்த மாம்பழங்களை அரிந்து தருகிறேன் அதன் சுவையைப் பாருங்கள்" என்று மாம்பழங்களை அரிந்து கொடுத்தான் குமார்.

நண்பர்களோ அதனைச் சாப்பிட்டு அற்புதமாகப் பாராட்டினார்கள்.

"குமார்! மாம்பழத்தில் தேன் சொட்டுகிறது! இந்தக் கிராமத்து மண்ணிற்கும் ருசியிருப்பது போன்று தெரிகின்றது. அதனையும் அள்ளிச் சாப்பிடலாம் போன்று தோன்றுகிறது" என்றான் ஒரு நண்பன்.

"உன்னைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றால் நீ மாமரத்தையே விழுங்கி விடுவாய்" என்றான் வேறொரு நண்பன்.

அந்த நண்பனின் கேலிப் பேச்சுக்குக் குமார் உட்பட அனைத்து நண்பர்களும் சிரித்துக் கொண்டார்கள்.

அந்த நேரத்தில் குமாரின் தந்தையார் அறையின் உள்ளேயிருந்து வெளியே வந்தார்.

குமாரின் நண்பர்களை நலம் விசாரித்த அவர் தன் தந்தையாரின் அறைக்குச்சென்று அவர் காலில் விழுந்து வணங்கிய பின்னர் புறப்பட்டார்.

அக்காட்சியைக் கண்ட குமாரின் நண்பர்கள் வியப்படைந்தனர். அவர்களின் பார்வையானது குமாரின் பக்கத்தில் திரும்பியது.

'நண்பர்களே! நீங்கள் எல்லோருமாக எதற்காக என்னைப் பார்க்கின்றீர்கள் எனத் தெரிகிறது. என் தந்தையார் என் தாத்தாவைத் தெய்வமாக மதித்து வருகிறார். தினமும் அவர் காலில் விழுந்து வணங்கி விட்டுத்தான் மற்ற வேலைகளைக் கவனிப்பார்! இது அன்றாடம் எங்கள் வீட்டில் நடைபெறும்" என்றான் குமார்.



குமாரின் தந்தையார் அவன் நண்பர்களின் மனதில் உயர்ந்து நின்றார்.

விருந்து முடிந்த பின்னர் குமார் தன் நண்பர்களைத் தோட்டத்திற்கு அழைத்து வந்தான்.



அந்நேரம் தோட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு குமார் அதிர்ச்சியடைந்தான்.

தோட்டத்தில் அவன் தந்தையார் வேலையாட்கள் உதவியோடு உயரமாக வளர்ந்து நின்ற மாமரத்தை வெட்ட முயற்சி செய்து கொண்டிருந்தார்.

'சற்று நேரத்திற்கு முன்னர்தானே இந்த மரத்தின் பழங்களை நம் நண்பர்கள் பாராட்டிப் பேசினார்கள்? இப்போது இந்த மரத்திற்கு ஆபத்து வந்துவிட்டதே! இதனை உடனே தடுத்தாக வேண்டும்' என்ற முடிவோடு தன் தந்தையின் அருகே ஓடினான் குமார்.

"குமார்! உன் நண்பர்களோடு இங்கே எதற்காக வந்தாய்? இங்கே மரம் வெட்டும் வேலை நடந்துகொண்டிருக்கிறது! இந்த இடத்தில் வீடுகட்ட முடிவு செய்துவிட்டேன்" என்றார் குமாரின் தந்தை.

'அப்பா! மரத்தை வெட்டாமலேயே வீடுகட்டலாமே" என்றான் குமார்.

"குமார் இந்த மரத்திற்கு வயதாகிவிட்டது. வயதானப் பொருளை விட்டு வைக்கக்கூடாது. உடனே அழித்திட வேண்டும்" என்றார் குமாரின் தந்தையார்.

அதனைக் கேட்ட குமார் சிறிது நேரம் யோசனை செய்தான். 'எப்படியாவது இந்த மரம் வெட்டப்படுவதை நாம் தடுக்க வேண்டும். அதோடு நம் தந்தையின் மனதையும் மாற்ற வேண்டும்' என யோசித்தவனாய் தன் தந்தையாரை நோக்கினான்.

"அப்பா! வயதாகிவிட்டால் அதனை உடனே அழித்துவிட வேண்டுமென்று கூறுகின்றீர்களே! வீட்டில் தாத்தாவுக்கு வயதாகி விட்டதே! அவரை ஏன் விட்டு வைத்திருக்கின்றீர்கள்!" என்று கேட்டான் குமார்.

குமாரின் இந்தக் கேள்வியானது அவன் தந்தைக்குச் சரியான நெத்தியடியாக இருந்தது. அவர் திடுக்கிட்டவராய் குமாரைப் பார்த்தார்.

"அப்பா! எனக்கு நீங்களும், அம்மாவும் தெய்வம். உங்களுக்கோ உங்கள் தந்தையாரும், தாயாரும் தெய்வங்கள். அவர்களுக்கு அவர்களது தாய், தந்தையார் தெய்வம். ஒரு மனிதருக்கு மாதா, பிதா, குரு மூவருமே தெய்வங்கள். ஆனால் "அந்த மூவருக்கும் தாவரங்களே தெய்வம். கடவுள் நமக்கு உணவுகள் தரவேண்டியே தாவரங்களைப் படைத்துள்ளார். அவை எல்லாம் நமக்கு நன்றியோடு உணவுப் பொருளைத் தந்து தங்கள் கடமையைச் செய்து



வருகின்றன. ஒருபோதும் அவை நம்மை ஏமாற்றியதில்லை. அழித்ததில்லை. ஒரு சில மனிதர்கள்தான் தங்கள் கடமையை மறந்து அவற்றை அழிக்கின்றார்கள். தாவரங்களை வாழ வைப்பது மனிதர்களின் கடமை. நம்மை வாழவைப்பவர்கள் யாராகயிருந்தாலும் அவர்கள் தெய்வத்திற்குச் சமம். அப்படி யென்றால் இந்தத் தாவரங்களும் தெய்வத்திற்குச் சமம்தான்' என்றான் குமார்.

குமாரின் தந்தை தன் தவறை உணர்ந்தார். மரம் வெட்டுகின்ற முயற்சியைக் கைவிட்டார்.

அங்கு நடந்ததைக் கவனித்துக்கொண்டிருந்த நண்பர்கள் எல்லோரும் குமாரைச் சூழ்ந்துகொண்டார்கள். "நண்பா! உன் அறிவுரை உன்னுடைய தந்தையாரைத் திருத்தியது போன்று நாட்டில் தாவரங்களை அழிக்க நினைக்கும் அனைவரையும் திருந்தச் செய்வோம்! மரங்களை நடுவதும், வளர்ப்பதும் அன்றாடக் கடமையென்று எல்லோர்க்கும் புரியவைப்போம்.

– கே.நல்லசிவம்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துப் புதிய சொற்களைக் கண்டறியலாம்.
  - பரிமாறினான்
  - ........................................
  - ........................................
- பாடப்பகுதியை வாசித்துக் கீழ்வரும் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.
  - மரத்தை வெட்ட நினைத்த அப்பாவிடம் குமார் என்ன கேள்வி கேட்டான்?
  - மாதா, பிதா, குரு இம்மூவருக்குமே தெய்வம் என்று குமார் எதனைக் குறிப்பிடுகிறார்?
- மரங்களை வெட்டுவதற்கெதிரான முத்திரை வாக்கியங்கள் தயாரியுங்கள்?
- மரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையிலான துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்.

## சுற்றுச்சூழல் இயக்கங்கள்

உலக மக்கள் அனைவரும் இன்று எழுந்துள்ள சுற்றுச்சூழல் பிரச்சனைகளை அறிந்துள்ளார்கள். மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. பொதுநல ஆர்வம் கொண்ட பலர், மாசுக்கேடு ஏற்படும் போதெல்லாம் கொதித்தெழுந்து போராட்டங்கள் நடத்துவதையும் பொது நல வழக்குகள் பலவற்றை நீதிமன்றத்தில் தொடர்வதையும் இன்று நாம் காணலாம். இயற்கை வளங்களைச் சேமித்து வைப்பதற்கும், மாசுக்கேட்டைத் தடுப்பதற்கும், நிலத்தினைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கும் இயக்கங்கள் பல இன்று தோன்றியுள்ளன. காற்றின் தூய்மை. தண்ணீர் தூய்மை, இரைச்சல்களைக் குறைத்தல், பூச்சிக் கொல்லி மருந்துகளைக் கட்டுப்படுத்துதல், நச்சுப் பொருள்களை ஒழித்தல், கடலில், கழிவுகள் குப்பைகள் கலப்பதைத் தடுத்தல், அழிந்துவரும் உயிரினங்களைப் பாதுகாத்தல், ஆகியவை குறித்துப் பரவலான சட்டங்களை நடைமுறை படுத்த வேண்டும் எனவும் நடவடிக்கையை எடுக்கக் கோரியும் உலகெங்கும் சுற்றுச்சூழல் இயக்கங்கள் பெருகி வருவது வரவேற்கத்தக்கது.

மேற்கத்திய நாடுகளில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகச் சுற்றுச்சூழல் இயக்கங்கள் தோன்றின. பின்னர் உலகம் முழுவதும் இத்தகைய இயக்கங்கள் பரவ ஆரம்பித்தன. இந்தியாவிலும் சுற்றுச்சூழல் இயக்கங்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு போராடி வருகின்றன. அணைகட்டுகள் கட்டப்படும் பொழுது மக்கள் இடம்பெயர்தல், ஆறுகள், ஏரிகள், விளைநிலங்கள் மாசுபடுதல். வீடு கட்டுவதற்காக ஏரிகள், காடுகளை ஆக்கிரமித்தல். அரசாங்கத்தின் பொருளாதாரத்திற்காக விளைநிலங்களில் சுரங்கங்களைத் தோண்டுதல் போன்ற பிரச்சனைகளுக்குச் சுற்றுச்சூழல் இயக்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துப் போராடி வருகின்றன. அத்தகைய சில இயக்கங்களைப் பற்றி காணலாம்.

### பிஷ்னோய் இயக்கம்



பிஷ்னோய் மக்கள் (Bishnoi People), 540 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தங்களின் ஆன்மிக குரு ஜாம்பேஷ்வர் என்ற ஜாம்பாஜி அருளிய 29 நன்னெறிகளை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வாழ்பவர்கள். 'பிஷ்' எனும் சொல்லிற்கு இருபது என்றும் 'னோய்' எனும் சொல்லிற்கு ஒன்பது என்றும் பொருள். தங்களின் குரு அருளிய 29 நன்னெறிகளில் தங்களின் அடிப்படை உடல் நலத்தைப் பேணி காத்திட 10 நன்னெறிகளும், நல்ல சமூகப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்திட 7 நன்னெறிகளும். இறைவனை வழிபட 5

நன்னெறிகளும், கால்நடைகளை நன்கு வளர்த்தல், விலங்குகளைக் கொல்லாதிருத்தல், செடி, கொடி, மரங்களை அடியுடன் வெட்டாமல், இயற்கை சூழ்நிலையைக் காத்திட 7 நன்னெறிகளும் கடைப்பிடித்து வாழ்பவர்கள். தூய சைவ உணவை மட்டுமே உண்பவர்கள். பிஷ்னோய் மக்கள் இயற்கையின் நண்பர்கள்.

பிஷ்னோய் மக்கள் காட்டையும், காட்டு விலங்குகளையும் நேசிப்பதில் சிறந்தவர்கள். கால்நடைகள் வளர்ப்பே தங்களின் தொழில். தங்கள் வாழும் பகுதிகள் சுற்றித் திரியும் புள்ளிமான்கள், கலைமான்கள், காட்டெருமைகள், மயில்கள் போன்ற விலங்குகள் தங்களின் வேளாண் நிலங்களில் மேய்ந்தாலும், அதனை அடித்து விரட்டுவதில்லை. கடும் கோடைக்காலத்தில் காட்டு விலங்குகள் நீர் அருந்த வசதி செய்துள்ளனர்.

**சிப்கோ இயக்கம் (Chipko Movement)**



சிப்கோ என்றால் 'இருகக் கட்டித் தழுவுதல்' என்று பொருளாகும். மரங்களை வெட்டவிடாமல் அவைகளைச் சுற்றித் தழுவிக் கொள்வதால் இதற்கு சிப்கோ இயக்கம் என்ற பெயர் ஏற்பட்டது. 1970இல் இமயமலையிலுள்ள கார்வால் பகுதியில் பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் பின்னர் ஹிமாசலப் பிரதேசம். கர்நாடகம், ராஜஸ்தான், ஒரிசா ஆகிய மாநிலங்களுக்குப் பரவியது.

– என்.மோகன்

## செயல்பாடுகள்

- விடை காண்போம்
  - சிப்கோ இயக்கம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
  - பாடப்பகுதியில் கூறப்பட்டுள்ள சுற்றுச்சூழல் இயக்கங்கள் எவை?
  - 'பிஷ்னோய்' எனும் சொல்லின் பொருள் யாது?
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்களின் பொறுப்பாளர்களை நேர்காணல் நடத்துவதற்கான ஒரு வினாநிரல் தயாரியுங்கள்.
- 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்னும் தலைப்பில் பேசுவதற்கு ஒரு சொற்பொழிவுக் குறிப்பு தயாரியுங்கள்.



அலகு 2

# பேதமில்லா உலகம்



சமூகத்தில் அனைவரும் சமமாதலால் வித்தைகள் பலகற்று ஒளிபடைத்த கண்ணோடும் உறுதிகொண்ட நெஞ்சோடும் விந்தைகள் புரிந்திட ஊனம் ஒரு தடையல்ல என்பதைப் புரிந்துகொள்வோம்.

# பொன்னுலகம் செய்திடுவோம்



## மாற்றுலகம் அமைப்போம்

ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம் தம்பி – நாம்
ஒருமைப் பாட்டைக் காத்திடுவோம் தம்பி
வேற்றுமையைக் களைந்தெடுத்து தம்பி – நாம்
மாற்றுலகை அமைத்திடுவோம் தம்பி

சாதி என்னும் அரக்கனையே தம்பி – நாம்
தீயிலிட்டு அழித்திடுவோம் தம்பி
புதுமைகளைப் போற்றிடுவோம் தம்பி – நாம்
பொன்னுலகம் செய்திடுவோம் தம்பி

கருப்பு சிவப்பு கசப்புணர்வைத் தம்பி – நாம்
கருத்துடனே விட்டொழிப்போம் தம்பி
உடலில் ஓடும் இரத்தமதைத் தம்பி – நாம்
உணர்வு கொண்டு அறிந்திடுவோம் தம்பி

சமாதானம் நமது சொத்து தம்பி –நாம்
சத்தியத்தைக் கடைப்பிடிப்போம் தம்பி
வித்தை பல கற்றிடுவோம் தம்பி – நாம்
விந்தை உலகம் செய்திடுவோம் தம்பி

எஃகு கோட்டை இவ்வுலகம் தம்பி – நாம்
ஏற்றமுடன் காத்திடுவோம் தம்பி
எதிரி என்று எவருமில்லை தம்பி – நாம்
ஏற்றம் கொண்டு வாழ்ந்திடுவோம் தம்பி

– பாரதிராஜன்.

**ஆசிரியர் குறிப்பு**

குறிப்பிடத்தக்க குழந்தைக் கவிஞர்களில் ஒருவர். மரபுக் கவிதைகள் பாடுவதில் வல்லவர்.

## செயல்பாடுகள்

- வாசிப்போம் / கண்டுபிடிப்போம்.
  - பாடலை வாசித்து ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

    வாழ்ந்திடுவோம் / காத்திடுவோம்

    ..............................................................
- இசையோடு பாடுவோம்.
  - பாடலைப் புதிய மெட்டமைத்து இசையோடு பாடுவோம்.
- சொற்பொழிவு

  'சமூகத்தில் அனைவரும் சமம்' என்ற தலைப்பில் சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்யுங்கள். சொற்பொழிவு நடத்துங்கள்.
- சமூக ஒற்றுமையை உணர்த்தும் முத்திரை வாக்கியம் தயாரியுங்கள்.

| |
|---|
| ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு |
| ஒற்றுமை உயர்வு தரும் |
| |
| |
| |

- பாடலில் பிடித்த வரிகளை எழுதி அதற்கான காரணங்களையும் எழுதுங்கள்.

## காமராஜரின் எளிமை

காந்தியப் பாதையில் கால் சோராது நடந்தவர் காமராஜர். நேர்மை அவரது மூச்சாக இருந்தது. அதனால்தான் அவருடைய புகழ் நிலைத்திருக்கிறது.

### இங்கேயே இருக்கிறதுதான் சரி

காமராஜர் பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சென்னை தி.நகர் திருமலைப்பிள்ளைச் சாலையில் உள்ள வீட்டில்தான் வசித்தார். அவர் முதலமைச்சரானபோது, அதிகாரிகள் பெரிய மாளிகையைப் புதுப்பித்து தயார் செய்து விட்டனர். அரசு வழங்கும் வீடு). ஆனால் அவர் சொன்னார், 'நான் இருக்கிற இடத்துலயே இருந்துட்டுப் போறேன்' என்று.



ஐயா! உங்களைப் பார்க்க பெரிய மனிதர்கள் நிறையபேர் வருவாங்க. நிறைய கார்கள் வரும். இந்த வீடு (திருமலைப்பிள்ளைத் தெருவீடு) இடம் போதாது... என்று அதிகாரிகள் விளக்கம்தர முற்பட்டனர்.

'நம்மைப் பார்க்க சாதாரண ஆளுங்களும் வருவாங்க. அவங்களுக்கெல்லாம் இந்த வீடுதான் தெரியும். வேணும்னா பெரிய மனுஷங்க என்னைக் கோட்டையில் வந்து பார்த்துக்கட்டும். எல்லாம் இதுவேபோதும்' என்று சொல்லி விட்டார் அவர்.

அவருக்குத் தன்னுடைய சவுகரியங்களைவிட மக்கள்தான் முக்கியம்.

**அவங்களைவிடவா நாம ஒசத்தி?**

ஆட்சி நடத்துகிறவர்கள் கண்டிப்புடன் இருந்தால்தான், அரசு அலுவலர்களிடமும் ஊழல் இல்லாமலிருக்கும் என்பது காமராஜரின் நம்பிக்கை.

ஒருசமயம், அவர் தம்முடைய தாயைப் பார்க்க ஊருக்குச் சென்றிருந்தார். வீட்டில் தாயுடன் பேசிக்கொண்டிருந்தபோது, வீட்டுக்குள் குழாய் தண்ணீர் குடத்தில் விழும் ஓசை கேட்டது.

'உள்ளே தண்ணீர் விழறாப்பல சத்தம் கேட்குதே? என்று தாயிடம் வினவினார்.

'நான் பொதுக்குழாயில் தண்ணி பிடிச்சிட்டுவர சிரமப்பட்டேன். முனிசிபாலிட்டிக்காரங்க பார்த்துட்டுக் குழாய் போட்டுக் குடுத்தாங்க' என்றார் தாய்.

'எந்த விண்ணப்பமும் போடாமல் குடிநீர் குழாய் இணைப்புப் பெறுவது தவறு. நம்ம ஊரில் எல்லாரும் பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்கறப்ப, உனக்கு மட்டும் சலுகையா?' என்று கூறிய காமராஜர், முனிசிபல் அலுவலரை அழைத்து உடனே தம்வீட்டு குடிநீர்க் குழாய் இணைப்பைக் துண்டிக்கச் செய்தார்.



அன்று நடந்ததையும் இன்று நடப்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது எது நேர்மை என்பது புரிகிறதுதானே!

காமராஜரின் தங்கை நாகம்மாளின் மகள் மங்களம். அவருடைய மகன் கனகவேலு. அந்த இளைஞன் ஒருமுறை காமராஜரிடம் வந்து, 'தாத்தா, நான் எம்.பி.பி.எஸ் படிக்க விரும்புறேன். விண்ணப்பம் போட்டேன். நேர்முகத் தேர்வுக்கும் போய் வந்தாச்சு. நீங்க ஒரு வார்த்தை 'சி.எம்'மிடம் சொன்னா எனக்குச் சீட் கிடைச்சிடும்' என்றான். (காமராஜர் அப்போது முதலமைச்சராய் இருந்திருக்கவில்லை).

காமராஜர் பேரனிடம் சொன்னார், 'கனகவேலு, யார்யாருக்கெல்லாம் சீட் கொடுக்கலாம்னு தீர்மானிக்க ஒரு கமிட்டி இருக்கு. சிபாரிசு பண்ணி சீட் வாங்கினா அப்புறம் கமிட்டி எதுக்கு? உனக்குத் தகுதி இருந்தா இடம் கிடைக்கட்டும். இல்லேன்னா கோவையில் விவசாயக் கல்லூரியில் சேர்ந்துப்படி. நான் யாரிடமும் சிபாரிசு செய்ய மாட்டேன் என்றார். (கனகவேலுவிற்கு மருத்துவக் கல்லூரியில் சீட் கிடைக்கவில்லை). இப்படி எளிமை, நேர்மை பற்றிச் சொல்ல எத்தனையோ நிகழ்ச்சிகள் உண்டு. சொல்லப் போனால் அவருடைய வாழ்க்கையே நேர்மைக்கு விளக்கம் எனலாம்.

– குபேந்திரன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்?
    - காமராஜர் சென்னையில் எங்கு வசித்து வந்தார்?
    - காமராஜரின் தங்கையின் பெயர் என்ன?
    - ஆட்சி நடத்துபவர்கள் கண்டிப்புடன் இருக்க வேண்டும் என்று காமராஜர் கூறக்காரணம் என்ன?
    - 'கோட்டை' என்ற சொல் எதனைக் குறிக்கிறது?
- காமராஜரின் பண்புகள் பற்றிச் சிறு குறிப்பு எழுதுங்கள்
- கட்டுரை எழுதலாம்

நீங்கள் அனைவரும் நம் நாட்டின் தூண்கள் அல்லவா! நீங்களும் வளர்ந்த பிறகு நாட்டிற்குத் தொண்டு செய்வீர்கள் என்பது உறுதி. காமராஜரைப் போல மக்கள் தொண்டாற்ற நீங்கள் தேர்ந்தெடுக்கும் துறை எது? எவ்வாறு சேவை செய்வீர்கள் என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுங்கள்.

**எ.கா:** நான் மருத்துவரானால்......
நான் முதலமைச்சரானால்......

## ஏழ்மை தடையல்ல!

கண்ணன் எட்டாம் வகுப்பு படிப்பவன். பள்ளிக்கூடத்தில் கட்டுரைப்போட்டி நடைபெற இருப்பதாக அவனது வகுப்பாசிரியர் கூறினார்.

வகுப்பில் பல மாணவர்கள் கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ளப் போவதாகக் கூறினர். கண்ணனும் போட்டியில் கலந்துகொள்ள விரும்பி பெயரைக் கொடுத்துவிட்டான். கட்டுரைப் போட்டியின் தலைப்பு 'சுற்றுலாத் தலம்'. போட்டியில் கலந்து கொள்வதாக முடிவெடுத்துவிட்டாலும் கண்ணனுக்கு உள்ளூர சிறு அச்சம் இருந்தது. காரணம், அவன் ஏழை மாணவன். அவன் தந்தை கண்ணனைச் சுற்றுலா எதற்கும் அழைத்துச் சென்றது இல்லை.



ஆனால் கண்ணனுடன் படிக்கும் மற்ற மாணவர்களோ செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகள். அவர்கள் தங்கள் வீடுகளில் கணினியும் இணைய வசதியும் இருப்பதாகக் கூறினார்கள். மேலும் இணையத்தில் பெற முடியாத தகவல்களே இல்லையென்றும் சொன்னார்கள். அவர்கள் டில்லி,



மும்பை, கொல்கத்தா போன்ற நகரங்களைப் பற்றிய செய்திகளையெல்லாம் இணையத்திலிருந்து சேகரித்துக் கட்டுரை எழுதப் போவதாகவும் சொன்னார்கள். அதைக்கேட்ட கண்ணனுக்கோ தனது நிலையைப் பற்றி வருத்தம்தான் வந்தது.

மாலையில் வீடு திரும்பிய கண்ணன் தன் தந்தையிடம் பள்ளியில் நடக்கவிருக்கும் கட்டுரைப் போட்டியைப் பற்றிச் சொன்னான். கூடவே, "அப்பா! என்னுடன் படிக்கும் மாணவர்கள் பலரும் இணையத்திலிருந்து பல தகவல்களைச் சேகரித்துக் கட்டுரை எழுதப் போவதாகச் சொன்னார்கள். நம் வீட்டிலும் கணினியும் இணைய வசதியும் இருந்தால் நானும் சென்னை, மதுரை போன்ற நகரங்களைப் பற்றி, தகவல் சேகரித்து கட்டுரை எழுதுவேன். இப்போது என்னால் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற முடியுமா? என்று சந்தேகமாக இருக்கிறது!" என்று வருத்தத்தோடு கூறினான்.

அதைக்கேட்ட கண்ணனின் தந்தையோ, "நம் வசதிக்குக் கணினி வாங்கும் நிலையிலா இருக்கிறோம்? நம் கிராமத்தின் அருகிலேயே அழகான அருவி இருக்கிறதே. நாமும்தான் ஓரிருமுறை அந்த அருவிக்குச் சென்று நீராடியிருக்கிறோம்.

அருவியின் அருகிலேயே உணவு சமைத்து உண்டு மகிழ்ந்தோம். நீ அந்த அருவிக்குச் சென்று வந்த உனது அனுபவத்தைச் சுவைபடக் கட்டுரையில் எழுது!" என்று சொன்னார்.

தந்தை கூறியதைக் கேட்ட கண்ணனுக்குத் தனது ஏழ்மை நிலைமை பற்றிய வருத்தம் இருந்தாலும், ஏதோ பெயரளவிற்குக் கிராமத்தின் அருகிலிருக்கும் அருவிக்குச் சென்று வந்தது பற்றிய தகவல்களைச் சேகரித்து எழுதிப் படித்துக் கொண்டான்.

சிலநாட்கள் கடந்தன. பள்ளியில் கட்டுரைப் போட்டி நடைபெற்றது. கண்ணனுடன் படிக்கும் மற்ற மாணவர்கள் எல்லோரும் அவனிடம் தாங்கள் லண்டன், நியூயார்க் போன்ற நகரங்களைப் பற்றி எழுதியிருப்பதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள்.

மறுவாரமே பள்ளி ஆண்டு விழாவும் வந்தது. பல்வேறு கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, மாணவர்கள் பங்கேற்ற போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசளிக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. மாணவ, மாணவியர் ஆர்வம் பொங்கக் காத்திருந்தனர். கண்ணனால் தன் காதுகளை நம்பவே முடியவில்லை. கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருப்பதாகக் கண்ணனின் பெயரைக் கூறினார் மாவட்டக் கல்வி அதிகாரி.



அவர் கண்ணன் எழுதிய கட்டுரையைப் பற்றிக் கூறும்போது, "கண்ணன் எழுதிய கட்டுரை வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இல்லாமல் அனுபவ அறிவாக அமைந்திருந்தது. மேலும் இயற்கை அழகு, சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வுடன் கட்டுரை வடிக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் அக்கட்டுரை முதல் பரிசுக்குரிய தகுதி பெற்றிருக்கிறது" என்று கண்ணனைப் பாராட்டி பெருமையோடு கூறினார். கண்ணன் பரிசு பெறும்போது அனைவரும் கைதட்டிப் பாராட்டினர்.

மாலை வீடு திரும்பிய கண்ணன் தன் தந்தையிடம் தான் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றதைக் கூறி, அதற்கு வழிகாட்டிய தந்தைக்கு நன்றியையும் கூறினான்.

கண்ணனைப் பாராட்டிய அவனது தந்தை, "கண்ணா! திறமைக்கும் அறிவுக்கும் ஏழ்மை ஒருபோதும் தடையாகாது. அறிவும் அனுபவமும் ஒன்று சேரும்போது வெற்றியும் புகழும் தானாகவே நம்மை வந்தடையும்!" –என்று கூறினார். அனுபவ அறிவே சிறந்தது என்று கண்ணன் புரிந்து கொண்டான்.

– கீர்த்தி




## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை நன்றாக வாசித்துக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.
  - கண்ணனுடன் படிக்கும் செல்வந்தர் வீட்டுப்பிள்ளைகள் எப்படிக் கவிதை எழுதுவதாகத் தீர்மானித்தனர்?
  - கட்டுரைப் போட்டியில் வெற்றிபெறக் கண்ணனுடைய தந்தை கூறிய ஆலோசனையைக் கூறுங்கள்.
  - கண்ணன் எழுதிய கட்டுரையின் தலைப்பை எழுதுங்கள்.
- நீங்கள் சுற்றுலா சென்ற அனுபவத்தைக் கட்டுரையாக எழுதுங்கள்.
- பரிசளிப்பு விழாவிற்கான ஒரு நிகழ்ச்சி நிரல் தயாரியுங்கள்.
- கட்டுரைப் போட்டியில் வெற்றிப்பெற்ற கண்ணனைப் பாராட்டிப், பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.
- பள்ளியிலுள்ள தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்திக் கீழே கொடுக்கப்பட்டுள்ள சுற்றுலாதலங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்துத் தொகுப்பாக வெளியிடுங்கள்.
  - கன்னியாகுமரி
  - மலம்புழை

# ஊனம் ஒரு தடையல்ல



## ஏலாதி

கால் இல்லார் , கண் இல்லார் நா இல்லார்
யாரையும் பால் இல்லார், பற்றிய நூல்
இல்லார், சாலவும் ஆழப் படும் ஊண்
அமைத்தார், இமையவரால் வீழப்படுவார் விரைந்து

–கணிமேதாவியார்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஏலாதி கணிமேதாவியாரால் இயற்றப்பட்டது. ஏலம், இலவங்கம், சிறுநாவல் பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறும் கலந்து செய்த கலவை உடல் நோயைப் போக்கும். அது போல உள்ளத்து நோயை அகற்றும் 80 பாடல்களின் தொகுதி ஆகும்.

### பொருள்

கால் இழந்தோர், கண் பார்வையற்றோர், வாய் பேசாதவர், தனக்குத் துணையாக யாரும் இல்லாதவர், சிறந்த நூலறிவு இல்லாதவர் ஆகியோருக்கு உணவு கொடுத்தவர் தேவர்களால் மிகவும் விரும்பப்படுபவர் ஆவர்.

**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**

திருக்குறள்,
நாலடியார்,
நான்மணிக்கடிகை,
இன்னாநாற்பது,
கார்நாற்பது,
இனியவைநாற்பது,
களவழிநாற்பது,
ஐந்திணை ஐம்பது,
திணைமொழி ஐம்பது,
ஐந்திணை எழுபது,
திணைமாலை,
நூற்றைம்பது
திரிகடுகம்
ஆசாரக்கோவை
பழமொழி நானூறு
சிறுபஞ்சமூலம்
ஏலாதி
முதுமொழிக்காஞ்சி
கைந்நிலை

## சிறுபஞ்சமூலம்

புண்பட்டார் போற்றுவார் இல்லாதவர் போகுயிரார்
கண்கெட்டார் காலிரண்டும் இல்லாதார் கண் கண்பட்டு
ஆழ்ந்து நெகிழ்ந்தவர்க்கு ஈந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து....

– காரியாசான்

'பஞ்சம்' என்றால் ஐந்து. 'மூலம்' என்பதற்கு வேர் என்பது பொருள். சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சில், கண்டங்கத்திரி, சிறுவழுதுணை ஆகிய ஐந்து வேர்களின் கலவை உடல் நோயைப் போக்குவது போல் உள்ளத்து நோயை அகற்றும் ஐந்து கருத்துக்களைக் கூறும் நூல் ஆகும். இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான சிறுபஞ்சமூலம் நான்கு அடிகளால் அமைந்த நூறு பாடல்களைக் கொண்டது.

### பொருள்

போருக்குச் சென்று காயப்பட்டவர், பாதுகாக்கும் உறவுகள் இல்லாதவர், உயிர் போகும் தருவாயில் உள்ளவர், கண்பார்வை இழந்தோர், கால்கள் இரண்டும் இழந்தவராகிய ஐந்து வகை மனிதர்களைக் கண்களால் காணும் போது மனமிரங்கி உள்ளம் உவந்து வேண்டுவன கொடுப்பவர்கள் தன் வாழ்நாள் வரை மனமகிழ்ச்சியாய் வாழ்வார்கள்.

## செயல்பாடுகள்

- அகராதி பயன்படுத்திப் பொருள் எழுதுங்கள்.

நூல் – புத்தகம்
இமையவர் –
விழவு –
ஊண் –
சாலவும் –

- பிரித்து எழுதுக

காலில்லாதார் – கால் + இல்லாதார்
கண்ணில்லார் –
நாவில்லார் –
பல்லில்லார் –
நூலில்லார் –

- இறைவனுக்கு விருப்பமானவர் யார்? என்று கணிமேதாவியார் கூறுகிறார்.

- எதிர்ச்சொல் கண்டுபிடியுங்கள்.
    - இல்லை
    - மகிழ்ச்சி
    - போற்றுதல்
    - கடை
- வாசிப்போம்
    - செய்யுளை நன்றாக வாசித்துக், கலந்துரையாடுங்கள் செய்யுளின் மையக்கருத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.

## சிகரம் தொட்ட அருணிமா சின்ஹா

இந்திய மூவர்ணக் கொடியை உலகின் மிக உயரத்தில் பறக்கவிட்டவர் கால் இழந்த இந்த சாதனைப் பெண். 2011 இல் இவர் தொடர்வண்டியிலிருந்து சில திருடர்களால் வெளியே தூக்கி வீசப்பட்டார். மற்றொரு டிராக்கில் வந்த இன்னொரு ரயில் இவரது காலை நசுக்கியதில் தனது காலை இழந்தார் அருணிமா. தனது பிரச்சனையையே தனது பலமாகக் கருதிய இவர், 2013–ஆம் ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி நம் தேசியக் கொடியை நட்டு தேசத்திற்குப் பெருமை தேடித் தந்தார். உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்திய மாற்றுத் திறனாளி இவர்தான். முன்னாள் தேசிய வாலிபால் மற்றும் கால்பந்து வீராங்கனையான இவர், புற்றுநோயிலிருந்து விடுபட்ட இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கால், தான் மிகவும் ஊக்கம் பெற்றதாகக் கூறினார்.



இவர்கள் மட்டுமல்ல இவர்களைப் போலப் பலரும் தங்கள் சோதனைகளைச் சாதனைகளாக மாற்றியுள்ளனர். உடலிலிருக்கும் ஒவ்வொரு நரம்பிலும் நம்பிக்கை வேரூன்றியிருக்க வேண்டும். மனம் திடமாய் இருந்தால்போதும் செவ்வாய்க் கிரகத்திற்கே செல்ஃபி எடுக்கச் செல்லலாம். மனமிருந்தால் மார்க்கமுண்டு.

## மாரியப்பன் தங்கவேலு

(பிறப்பு 28 ஜூன் 1995) ஓர் இந்திய பாராலிம்பிக் உயரம் தாண்டுதல் வீரர். ரியோ டி.ஜெனிரோவில் நடைபெற்ற 2016 கோடைகால பாராலிம்பிக் விளையாட்டுகளில் ஆடவர் உயரம் தாண்டுதல் T-42 பிரிவில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் மற்றும் 2020 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற ஆடவர் உயரம் தாண்டுதல் T-63 பிரிவில் தங்கப் பதக்கத்தையும் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றார். இறுதிப் போட்டியில் 2004க்குப் பிறகு இந்தியாவின் முதல் பாரா ஒலிம்பியன் தங்கப் பதக்கம் வென்றவர். பெரியவடகம்பட்டி கிராமத்தில் பிறந்தார். ஆறு குழந்தைகளில் ஒருவராக. (நான்கு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி) அவரது தந்தை ஆரம்பத்திலேயே குடும்பத்தைக் கைவிட்டதாகவும், அவரது தாயார் சரோஜா தனது குழந்தைகளை ஒற்றைத் தாயாக வளர்த்து, ஒரு நாளுக்குக் காய்கறி விற்பவராகவும் ஒரு தொழிலாளியாகச்




செங்கல் சுமந்தும் வளர்த்தார். ஐந்து வயதில், மாரியப்பன் பள்ளிக்கு நடந்து செல்லும் போது குடிபோதையில் பேருந்து ஓட்டுநர் மோதியதில் அவரது வலது காலில் நிரந்தர ஊனம் ஏற்பட்டது. பேருந்து அவரது காலின் முழங்காலுக்குக் கீழே நசுக்கியது, இதனால் அது குன்றியது. இந்தப் பின்னடைவு இருந்தபோதிலும், அவர் இடைநிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார். திறமையான குழந்தைகளிடமிருந்து தன்னை வேறுபடுத்திப் பார்க்கவில்லை என்று அவர் கூறுகிறார். இந்திய அரசு இவருக்கு 2017 ஜனவரி மாதம் பத்ம விருதினையும் 2020 ஆகஸ்ட் மாதம் ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருதினையும் அளித்து கௌரவித்துள்ளது.

## செயல்பாடுகள்

- **வாசிப்போம்... விடையளிப்போம்**
  - அருணிமா சின்ஹா எந்த ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தில் தேசியக் கொடியைப் பறக்கவிட்டார்?
  - புற்றுநோயிலிருந்து விடுபட்ட இந்திய கிரிக்கெட் வீரர் பெயரை எழுதுங்கள்.
  - 2016 ஆம் ஆண்டு பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற இடம் எதுவென கூறுங்கள்.
  - இந்திய விளையாட்டுத் துறையில் சாதனை படைத்தோருக்கு வழங்கப்படும் உயரிய விருதின் பெயரை எழுதுங்கள்.
- மாரியப்பன் தங்கவேலுவை பாராட்டிக் கடிதம் எழுதுங்கள்.


## மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு

"ஊனம் என்பது உடலில் இல்லை, உள்ளத்தில்தான் எனும் உண்மையை உணர்ந்தால் மனிதப் பிறவியில் ஏற்படும் அங்க இழப்புகள் ஒரு பொருட்டல்ல. துயரங்களைப் பார்க்காமல், கண்ட துன்பங்களை எண்ணி எண்ணி வாழ்வை முடித்துக் கொள்ளுதல் அறியாமை.

உலக மக்களில் ஒன்பது சதவீதத்திற்கும் மேலாக ஊனமுற்றோர் உள்ளனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

உலகப்புகழ்பெற்ற மில்டன்" என்னும் பெருங்கவி கண்களை இழந்தபின் 'இழந்த சொர்க்கம்' எனும் காவியம் படைத்தனன்.

தமிழுலகில் இரட்டைப் புலவர்களான 'குருடர், முடவர்' இருவரும் சிறப்பானவர்கள். முடவரைக் குருடர் சுமக்க, முடவர் வழிகாட்ட நடந்ததோடு மட்டுமல்லாமல் தில்லைக் கலம்பகம்' எனும் சிற்றிலக்கியத்தையும் தமிழுக்குத் தந்தனர் தமிழ்ப் புலவர்களில் மற்றொருவரான "வீரராகவ முதலியார் கண்கள் தெரியாமல் இருந்தும் கவிஞராக மாறவில்லையா? மனிதனின் மகத்தான செயல்களைக் கவிமணியின் பாடலானது,


இரட்டைப் புலவர்கள்

"பிறப்பினால் எவர்க்கும் பெருமை வாராதப்பா சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டுமப்பா" என எடுத்துரைக்கிறது.

ஊனங்களால் உழன்றுவிடாமல் மனிதன் சிந்திக்க வேண்டும். உடல் உறுப்புகளில் ஓர்


ST-327-6-TAMIL(AT)-7-VOL-1


அந்தகக்கவி
வீரராகவ முதலியார்

உறுப்பு செயலாக்கம் குறைவாக இருந்தால் மற்ற புலன்கள் அதிகக் கூர்மையாக இருக்கும். அதை நாம் பயன்படுத்த வேண்டும். 'வள்ளுவர்' கல்லாதவரைப்பற்றிக் கூறும்போது, 'கல்லாதவர் முகத்திரண்டு புண்ணுடையார்' எனக்கூறி அவர்களைக் கண்ணில்லாதவர்களாகவே சுட்டிக் காட்டுகின்றார்.

துயரங்களை மறந்து, தூக்கங்களை மறந்து மாற்றுத்திறனாளிகள் பல்வேறு தொழில்கள் புரிகின்றார்கள். பலரை இரக்கப்படச் செய்து பிச்சை எடுத்து உண்ணாது அவர்களுக்கும் உழைத்து வாழும் நோக்கம் இல்லாமலில்லை. பலரும் நெசவுத் தொழிலாளிகளாகக் கூடை முடைபவர்களாகப் பீடி சுற்றுபவர்களாகத் தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீக்குச்சிகளை அடுக்குபவர்களாகப் பாய் முடைபவர்களாகக் கண் பார்வையற்றாலும் பேருந்து நிலையங்களில் லாட்டரிச் சீட்டு விற்பவர்களாகப் பலரும் தங்களால் முடிந்தவரை சுய உழைப்பில் வாழ்வது சிறப்பிற்குரியது

இந்திய அரசியல் சட்டத்தின் நாற்பத்தொன்றாம் பிரிவு ஊனமுற்றோர் நலன் குறித்ததாகும். ஐக்கிய நாடுகள் சபையும் ஊனமுற்றோர் நலனுக்குப் பேருதவி புரிகின்றது.


லூயிஸ் பிரெய்லி

நம் அரசானது மாற்றுத்திறனாளிகளுக்குக் கல்விக்கு வழி வகுத்துள்ளது. கண், காது, வாய் பாதிப்படைந்தோருக்குத் தனிப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வி முறைகள் கூட வேறுபாட்டுடன் காணப்படுகின்றன. கண் பார்வையற்றோருக்கு 'ப்ரெய்லி' எழுத்து முறையும், காது கேளாதோருக்குக் காது கேட்கும் கருவி வழங்கி அதன் மூலம் கல்வி வழங்கியும் வருகிறது. வாய் பேசாதவர்க்குச் சைகைகள் மூலம் கூடிய கல்வி முறையும் உள்ளது.

கால்கள் நடக்க முடியாத மாற்றுத்திறனாளிக்கு மூன்று சக்கர வாகனம் வழங்கி அதன் மூலம் அவர்களைப் பள்ளிக்கு வரச்செய்து கல்வி வழங்குகிறது.

எம். பத்மநாபன்



## செயல்பாடுகள்

◈ கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

'இழந்த சொர்க்கம்' என்ற நூலை எழுதியவர்........................................

'தில்லைக் கலம்பகம் ' என்பது ஒரு வகை............................................

கண்பார்வையற்றவர்களுக்கான எழுத்து முறை ..................................

◈ சிறு குறிப்பு எழுதுங்கள்

- பிரெய்லி முறை
- சைகை மொழி.

### பெயரெச்சம்

இராமு : 'பார்த்த முதல் நாளே, உன்னைப் பார்த்த முதல் நாளே...' என்று பாடி முனகிக் கொண்டே வேலையைச் செய்து கொண்டிருக்கிறான் இராமு.

தங்கை : அண்ணா! நீ பாடுகின்ற பாடலைக் கேட்கும்போது எங்கள் தமிழ் ஆசிரியர் கூறிய ஓர் இலக்கணம் நினைவுக்கு வருகிறது.

அண்ணன் : அப்படியா? பாடலில்..... இலக்கணமா?

தங்கை : ஆமா அண்ணா, நீ அந்தப் பாடலை ஒரு முறைகூட பாடேன்.

அண்ணன் : 'பார்த்த முதல் நாளே உன்னைப் பார்த்த முதல் நாளே!'

தங்கை : அண்ணா ! 'பார்த்த' என்கிற சொல்லைக் கவனித்தீர்களா?

அண்ணன் : 'பார்த்த' என்ற சொல் ஒரு முடிவற்ற சொல்லாகத் தோன்றுகிறதா?

தங்கை : இல்லை, 'பார்த்த' என்ற சொல்லுடன் சிவா, நாள், பையன் என்ற பெயர்கள் இணையும்போதுதான் வாக்கியம் முடிவு பெறுகிறது. எனவே 'பார்த்த' என்பது எச்சமாக நிற்கிறது.

அண்ணன் : அது என்ன எச்சம்? அப்படின்னா என்ன?

தங்கை : 'எச்சம்' என்றால் முழுமையடையாத சொல். இது பெயரெச்சம், வினையெச்சம் என இரண்டு வகைப்படும். முற்றுப்பெறாத வினைச்சொல் பெயரைக் கொண்டு முடியுமானால் அது 'பெயரெச்சம்' எனப்படும். வினைமுற்றைக் கொண்டு முடியுமானால் அது 'வினையெச்சம்' எனப்படும்.

அண்ணன் : சரி அப்பிடியெனில் 'வினைமுற்று' என்பது எதைக் குறிக்கிறது.

தங்கை : 'வினைமுற்று' என்பது ஒரு செயல் முற்றுப் பெற்ற நிலையைக் குறிக்கும். படம் பார்த்தான் என்பதில் 'பார்த்தான்' என்ற வினை பார்த்தல் என்ற செயலை நிறைவு செய்வதால் அது வினைமுற்று ஆகும்.

அண்ணன் : அவ்வாறெனில் 'பார்த்த முதல் நாள்' என்பது வினையெச்சம் அல்லவா?

தங்கை : இல்லை அண்ணா! 'பார்த்த' என்ற முற்றுப்பெறாத எச்சம் 'முதல் நாள்' என்னும் பெயரைக் கொண்டு முடிவதால் இது பெயரெச்சம். இதுபோல் பார்த்த மாணவன், ஓடிய குதிரை, வந்த மனிதன் என்பவைகளில் வரும் பார்த்த, ஓடிய, வந்த என்பவைப் பெயரெச்சங்கள் ஆகும்.

அண்ணன் : நன்றாகப் புரிந்தது.

# முகவரி தேடும் கிராமங்கள்



## தேடல்

என்
பழைய பள்ளித் தோழா

கனத்த மனத்தோடு கேட்கிறேன்
நம் கிராமம் எங்கே?

ஞாபகங்களில்
சில்லிட்டு மணக்கும் நம்
சிற்றூர் எங்கே?

ஆடிய வீதி எங்கே?
ஆற்றுப்படுகை எங்கே?

ஊரே உடுத்திருந்த
பச்சை நெசவு எங்கே?

சன்னஞ் சன்னமாய்க் கூவும்
தென்னங் குயில்கள் எங்கே?

ஒரு புயல் ராத்திரியின்
வாழை இலையாய்க்
கிழிந்துபோனதே நம் கிராமம்

பூக்கள் விற்ற கிராமம்
புழுதி விற்கிறது

அகல் விளக்கில்
ஒளிர்ந்த கிராமம்
மின்சார விளக்கில்
இருள்கிறது

லாரிச் சத்தத்தில்
புல்லாங்குழல் காணோம்

டீசல் புகையில்
பட்டாம்பூச்சி காணோம்

தேடிப் பார்த்தால்
தென்றல் காணோம்

திரும்பிப் பார்த்தால்
மலையைக் காணோம்.

எங்கே தோழா?

நாமெல்லாம் கதைபேசி
நடைபயின்ற சோலை எங்கே?

பாயும்நதி ஓரத்தில்
பாய்விரித்த மணல் எங்கே?

புல்லென்ற எழுத்தின்மேல்
புள்ளிவைக்கும் பனி எங்கே?

காதுகளில் சிருங்கரிக்கும்
கொலுசெங்கே?
வளையெங்கே?

– வைரமுத்து

## ஆசிரியர் குறிப்பு



பெயர் வைரமுத்து. பெற்றோர் இராமசாமி, அங்கம்மாள். பிறப்பு 1953 ஜூலை 13, மெட்டூர் (வடுகபட்டி), தேனி மாவட்டம். மனைவி பொன்மணி. பட்டங்கள் சாதனா சம்மான், டாக்டர், கவிப்பேரரசு, காப்பியக் கவிஞர், கவி சாம்ராட். படைப்புகள் கருவாச்சி காவியம், கள்ளிக்காட்டு இதிகாசம், மூன்றாம் உலகப் போர்.

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடப் பகுதியில் உள்ளது போன்ற முன்பு இருந்த கிராமத்தின் படத்தைக் கற்பனையில் வரைதல்.
- 'பண்டைய கிராமம், இன்றைய கிராமம்' பற்றிய கலந்துரையாடல் நடத்தி அட்டவணைப்படுத்திக் குறிப்பு எழுதுங்கள்.
- ஆசிரியர் குறிப்பு தயாரியுங்கள்.
- உங்கள் வீட்டுச் சுற்றுப்புறம் முன்பிருந்த நிலையில் இருந்து, தற்போது எப்படி உள்ளது என்று பெற்றோரிடம் கேட்டறிந்து எழுதுங்கள்.
- பாடலில் உனக்குப் பிடித்த வரி எது? காரணம் என்ன? எழுதுங்கள்.
- பாடலில் உள்ள எதுகை மோனைச் சொற்களைப் பட்டியலிடுங்கள்.

### முகம் மாறிய கிராமங்கள்!

நான் பிறந்த நல்லூர் கிராமத்தில் பொங்கலுக்கு வரும்படி பாப்பு அக்கா அழைத்தார்கள். சரி பொங்கலுக்குப் போனது மாதிரியும் இருக்கும். அக்காவையும். பார்த்த மாதிரியும் இருக்குமே என்று முதல் நாள் காலையிலேயே திருப்பூரிலிருந்து கிளம்பிவிட்டேன். காலை 9 மணிக்கே வெயிலின் தாக்கத்தை உணர முடிந்தது. புதிய நெடுஞ்சாலை அமைப்பதற்காக மரங்களை எல்லாம் வெட்டி வேரோடு



பிடுங்கி விட்டதால் அனல் காற்று வீசியது. அனல் காற்றிலிருந்து காப்பாற்றிக் கொள்ள செய்தித்தாளைச் சன்னல் பக்கமாகத் திருப்பிப் பிடித்தவாறு படிக்க ஆரம்பித்தேன்.

உச்சி வெயிலில் கந்தம்பாளையத்தில் இறங்கி என்னை அழைத்துச் செல்ல காத்திருந்த நண்பர், உறவினர் திரு.பழனியப்பனுடன் வீட்டுக்குச் சென்றேன். வீட்டுக்கு முன்னால் இரண்டு மூன்று கட்டில்கள் போட்டுத் தூங்குமளவுக்கு நிழல் பரப்பிக் கொண்டிருக்கும் வேப்பமரம்! கிளையிழந்து, பூவிழந்து, இலையிழந்து மொட்டையாய் நின்று கொண்டிருந்தது. "ஏக்கா மரத்தை வெட்டினே" என்றேன். மேவரத்து ஊட்டுக்காரங்க அவங்க டி.வி டிஸ்சுலே மரக்கிளை இடிக்கிதுனாங்க. கெழவரத்திலே கரண்ட் கம்பி மேலே ஒரையிது. அதாப்பா வெட்டிப்புட்டேன். இன்னும் நாலு மாசத்துல செழு செழு!ன்னு தழைஞ்சிகிடும்பா" என்று விளக்கம் அளித்தார். வெக்கை தாங்காமல் வீட்டிற்குள் சென்று மின்விசிறியைப் போட்டால் ஓடவில்லை. 'கரண்ட் அடிக்கடி போவுதப்பா கொஞ்ச நேரத்துல வந்திடும். இந்தா வீசிக்கோ என்று ஓலை விசிறியைக் கொடுத்தார். வராத மின்சாரத்துக்காக மரத்தை வெட்டிவிட்டார்கள்! வெளிப் புழுக்கத்தை மேலும் அதிகரித்தது மனப்புழுக்கம்.

கொஞ்ச நேரம் ஓய்வெடுத்த பின் மாலை ஐந்து மணிவாக்கில் காலாற சிறிது வெளியே சென்று வரலாம் என்று நானும் பழனியப்பனும் கிளம்பினோம். கூரை வீடுகள் ஓட்டு வீடுகளாகவும் சில ஓட்டு வீடுகள் தார்சு வீடுகளாகவும் உருமாறியிருந்தன. சிறிய வீடுகளெல்லாம். 'சிமெண்ட் கான்கிரீட்' பூசிக்கொண்டிருந்தன. வீட்டுக்கு வீடு கேபிள் டி.வி ஒயர்கள் குறுக்கும் நெடுக்குமாகச் சென்று கொண்டிருந்தன. சில வீடுகளில் டிஷ் ஆன்ட்டனா பொருந்தப்பட்டிருந்த காட்சி, அன்று மாட்டு வண்டி நின்று கொண்டிருந்த இடத்தில் இப்போது ரிக் வண்டிகள் இளைப்பாறிக் கொண்டிருந்தன. வழியில் சென்ற இளைஞர்கள் இந்தியில் பேசிக் கொண்டு சென்றார்கள். பழனியப்பனைக் கேள்விக்குறியோடு பார்த்தேன். இவங்கெல்லாம் நம்ம ஊரு ரிக் வண்டியிலே வேலை செய்ய வந்துள்ள வடமாநிலத்தவர்கள். இவங்கதாம்பா இப்ப நிறைய ஓட்டல்களே கூட வேலை செய்யறாங்க' என்றார். பழனியப்பன்.



எங்க பக்கத்து வீட்டுக்காரர் விஜேந்திரன் செல்போனில் சரளமாக இந்தியில் பேசியபடியே எதிரே வந்து கொண்டிருந்தார். 'என்னப்பா இந்தியிலே எல்லாம் வெளுத்துக் கட்டுற' என்றவுடன் அண்ணா ஒரிசாவிலே வண்டி (ரிக் வண்டி) ஓடுதண்ணா அங்கிருக்கிற

ஏஜெண்ட் கிட்டே நாலு வார்த்தை பேசிக்கிட்டு இருந்தண்ணா. 'செல்ஃபோனும் இந்தியும் இல்லைனா எங்க தொழிலே நடக்காதண்ணா' என்றார். இவரது மனைவி திருமதி ராஜேசுவரி பி.ஏ கணவனுக்குத் துணையாகத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார். இவர்களுடைய மகள் செல்வி.பூமதி அரசுப் பள்ளியில் தமிழ் வழியில் கல்வி பயின்று தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரியில் 2015 ஆம் ஆண்டு சேர்ந்துள்ளார். 52 ஆண்டுகளுக்குப் பிறகு (எனக்குப் பிறகு) வாழ்நாயக்கன் பாளையத்தில் இரண்டாவது மருத்துவர் உருவாகி வருகிறார். ஊரே பெருமைப்பட்டது அந்தப் பேத்தியின் சாதனையைக் கண்டு. "ஆசிர்வாதம் பண்ணுங்க தாத்தா" என்று பறந்து வந்த இளம் மருத்துவரை வாழ்த்தி உச்சிமுகர்ந்தேன்.



முக்கிய சாலைக்கு வந்த போது பள்ளிச் சிறுவர்கள் சீருடையில் பட்டாம் பூச்சிக்களாய் பறந்து வந்தார்கள். சில மாணவர்கள் அரசு வழங்கிய இலவச சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்கள். கந்தம்பாளையத்தில் இயங்கி வரும் நண்பர் சண்முகசுந்தரம் நடத்தும் காந்தி மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவர்கள் மஞ்சள் வண்ணப் பள்ளிச் சிற்றுந்துகளில் வந்து இறங்கினார்கள். கிராமச் சந்து பொந்துகளில் எல்லாம் ஆங்கிலப் பள்ளிகள் முளைத்துவிட்டன இப்பொழுது.

பகலும் இரவும் சந்திக்கும் அந்தி வேளையில் கூட்டம் கூட்டமாகக் கா!கா!கா என்று கத்திக் கொண்டு கந்தம்பாளையத்தில்

புளியந்தோப்புக்குள் அடையச் செல்லும் காக்கைக் கூட்டங்களைக் காணவில்லை. லேசான அனத்தலுடன் சாரை சாரையாகப் பறந்து வந்து மணியாரத் தோட்டத்துத் தென்னை மரங்களுக்குத் தங்கச் செல்லும் வெள்ளைக் கொக்குகளைக் காண முடியவில்லை. கீச்சு மூச்சு எனப் பல குரல்களில் பேசிக்கொண்டு தன் இணையுடன் கொக்குகள் வாழ்ந்த தென்னை மரங்கள் வறட்சியால் வாடி வதங்கி தலை சாய்ந்து விட்டன. வயல் கட்டிய பூமி வறண்டு வானத்தை நோக்கி வாய்பிளந்து நிற்கின்றன. மழைக்காக!!!

அப்படியே பொடி நடையாகத் தார்ச் சாலையில் மட்டப்பாறை வரைக்கும் போய் விட்டு வரலாம் என்ற என் ஆசையைப் பழனியப்பன் ஆமோதித்தார். ஊரின் வடமேற்கு மூலையில் சாலைக்கு மேற்புறமாகக் கல்வித்தந்தை காமராசர் திட்டத்தில் உருவெடுத்த அரசுத் தொடக்கப் பள்ளியுடன், பால்வாடிப் பள்ளியும் இப்பொழுது இணைந்து கொண்டது. நான் ஆரம்பப் பள்ளிக்கே கந்தம்பாளையம் தான் செல்ல வேண்டியிருந்தது. மேலும் மேற்கே சென்றோம். மந்தக் காட்டுக்குள்ளே இருந்த நாங்கள் இளம் வயதில் தூரி ஆடிய பெரிய வேலா மரத்தைக் காணவில்லை. தலைக்குத் தேய்த்துக் குளிக்க அரப்பும், மாசியப்பனுக்குப் பொங்கல் வைக்க நிழலும் கொடுத்த ஊஞ்ச மரங்களை வெட்டி அகலமான தார்ச்சாலை அமைத்து விட்டனர். மாசியப்பன் கோவில் மேற்புறத்துக் காட்டில் இருந்த புளியமரம் மாயமாகிவிட்டது. ஆடு மேய்த்துக் கொண்டு புளியமரத்து நிழலில் விளையாடி, பல் கூசும் புளியங்காய் பறித்துத் தின்று கூட்டாஞ்சோறு ஆக்கித் தின்று மகிழ்ந்த என் இளமைக் காலம் மனதில் நிழல் படமாக ஓடியது. ஒவ்வொரு காட்டுக்கும் அரணாக அமைந்து வெள்ளாமையைக் காத்த கிழவன் நம் வருங்காலச் சந்ததியினருக்குச் சிதைக்காமல் விட்டுச் செல்வோம்.

மரம் மட்டைகளை எல்லாம் அழித்து காடுகளைச் சூறையாடி பொட்டல் காடுகளாகவும், பாலைவனமாகவும் மாற்றிய பிறகு குளம் குட்டைகளைத் தூர்த்து ஏரி, ஆறுகளை நஞ்சாக்கி நாசமாக்கி அதன்மேல் கட்டியுள்ள அடுக்குமாடி வீடுகளில் குளிரூட்டப்பட்ட அறையில் அமர்ந்து கடைசிக் கவளம் உணவையும், கடைசி மீனையும் சாப்பிட்டு, கடைசிச் சொட்டுத் தண்ணீரையும் குடித்து முடித்த பிறகு என்ன செய்யப் போகிறோம்? பணத்தையும், பவுனையும் சாப்பிட முடியுமா? அந்த நிலை வருமுன் விழித்துக் கொள்வோம்.

– மருத்துவர் சு.முத்துசாமி

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து, பண்டைய கிராமத்தின் காட்சிகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- நீங்கள் வசிக்கும் பகுதியைப் பற்றித் தகவல்களைச் சேகரித்துக் கட்டுரையாக எழுதுங்கள்.
- பாடப்பகுதியை நன்றாக வாசித்து நவீனமயமாக்கல் காரணமாகச் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களைக் குறித்துச் சிறு குறிப்பு எழுதுங்கள்.
- பாடப் பகுதியில் பயன்படுத்தியிருக்கும் வட்டார வழக்குச் சொற்களைக் கண்டறிந்து அவற்றிற்கு இணையான எழுத்து வடிவிலான சொற்களை எழுதுங்கள்.
- பாடப் பகுதியில் வரும் கதாபாத்திரங்களைப் பயன்படுத்தி உரையாடல் ஒன்றைத் தயாரியுங்கள்.
- பண்டைய காலத்தில் இருந்ததைப் போன்று பசுமையான கிராமப் பகுதி அமைவதற்குத் தேவையானவை எவை? உங்களது கருத்துகளை எழுதுங்கள்.
- குறிப்பு எழுதுங்கள்.
  - ரிக் வண்டிகள்



## அலகு 3

# உழைப்போம் உயர்வோம்



நாம் வாழக்கூடிய நவீன உலகானது தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகப் பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளது. நம் நாட்டில் பாரம்பரியமாகவே செய்கின்ற தொழில்களும், குடிசைத் தொழில்களும் காணப்பட்டிருந்தன. காலத்தின் மாற்றத்தால் பல்வேறு தொழில்களும் நலிவடைந்து விட்டன.

# கைத்திறனில் கலையழகு



## அற்புதப் பாத்திரம்

ஆதி காலச் சமையலின்
அற்புதமான பாத்திரம்!
பாதுகாப்பை உணவிலே
பக்குவமாகச் சேர்ப்பது!

ஏரி,குளங்கள் குட்டையில்
எடுத்த களி மண்ணினால்
சேறு பிசைந்து செம்மையாய்
செய்த மண்ணின் கலயங்கள்!


சின்ன பெரிய பாத்திரம்
சிவப்பு நிறத்தில் உள்ளன!
மண்ணில் செய்து நெருப்பினில்
வேக வைத்த பாத்திரம்!

மண்ணின் கலயம் தன்னிலே
மணக்க மணக்க சமைக்கலாம்!
உண்ணும் நல்ல உணவினால்
உடலின் நலத்தைக் காக்கலாம்!

– கு.சாந்தி

## செயல்பாடுகள்

- மண் பானையின் பயன்கள் யாவை?
- பாடலை வாசித்து மண்பானையின் சிறப்பியல்புகளை எழுதுங்கள்.
- மண்பானைப்போன்று மண்ணினால் உருவாக்கும் வேறு பொருட்களை எழுதுங்கள்.
- பாடலில் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுங்கள்.
- புதிய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள். அகராதி பார்த்துப் பொருள் கண்டுபிடியுங்கள்.
    - ஆதி
    - சேறு
    - நெருப்பு
- பாடலுக்கு ஏற்ற மெட்டமைத்துப் பாடுங்கள். தனியாகவும் குழுவாகவும் பாடுங்கள்.
- மண்பாண்டக் கலைஞர் ஒருவரை நேர்காணல் நடத்துவதற்கான வினா நிரல் தயார் செய்யுங்கள்.
- 'மண்பானைச் சமையல் நன்மைகள்' பற்றிக் கலந்துரையாடுங்கள். தொகுத்து எழுதுங்கள்.
- மண்பானை செய்தல்– இதுபோல் உங்கள் பகுதியில் நடைபெறும் சுயதொழில்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுங்கள்.
- பலவிதமான பாத்திரங்கள் பற்றித் தெரியுமல்லவா? சொற்சூரியனைப் பூர்த்தி செய்யுங்கள்.



## குடிசைத் தொழில்

குடிசைத் தொழில் என்பது உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்கள் மூலம் செய்யப்படுபவை, அதுவும் வீட்டிலேயே வீட்டிலுள்ளோரால் செய்யப்படும் தொழில் எனலாம். வாழ்வதற்கான வழிகள் பலவாயினும் அவற்றுள் நல்லவற்றைத் தேர்வு செய்து திறமையுடன் மனிதன் வாழ்வானாகில், உலகம் அவனைக் கைகூப்பித் தொழும்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என நாமக்கல் கவிஞரின் கருத்துப்படி, ஆளுக்கொரு தொழிலைக் கற்றுக் கொள்வது மிகச் சிறந்தது. பிறரைச் சார்ந்திருக்காமல், சுயமாகச் சம்பாதித்து வாழ உதவுவது கைத்தொழில்தான். கிராமங்களே குடிசைத் தொழிலின் தொட்டில்கள். மூலப்பொருள்கள் மலிவு, உற்பத்திச் செலவு குறைவு, நிறைவான



வருமானம் இவையே குடிசைத் தொழிலின் சுயசரிதை. பாரதத்தில் பத்து கோடிப் பேர்களுக்கும் மேலானவர்களைக் குடிசைத் தொழிலானது, தொழில் வினைஞராக்கி வேலை வாய்ப்பினை நல்கியுள்ளது. நம் நாடு உற்பத்தி செய்யும் பொருட்களில் பாதியளவு குடிசைத் தொழில் மூலமே கிடைக்கிறது. இன்றைய சூழலில் மக்கள் தொகைப் பெருக்கமும், மக்களின் தேவைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அரசு எல்லோருக்கும் வேலை வாய்ப்பைத் தருவது நடைமுறையில் சாத்தியமல்ல. இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவது சுயதொழில் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

குடிசைத் தொழில்கள் பல. அவற்றுள் முக்கியமானவைகளாகப் பண்ணைத் தொழில்களான ஆடு, மாடு, பன்றி போன்றவை வளர்த்தல், தேனீ வளர்த்தல், கதர், கைத்தறிப் பொருட்கள், ஆடை நெய்தல், பாய் முடைதல், கயிறு திரித்தல், மரச் சாமான்கள் செய்தல், பிளாஸ்டிக் மூலம் பொருட்கள் வடிவமைத்தல், மெழுகுவர்த்தி செய்தல், ஊதுபத்தி செய்தல், காலணி தயாரித்தல், கண்ணாடி உற்பத்தி, மட்பாண்டம் செய்தல், காளான் வளர்ப்பு, சோப்பு தயாரித்தல் எனப் பலவற்றையும் கூறலாம். கைத்தொழில் மூலம் செய்யப்படும் பொருட்கள் கதர் கைத்தொழில் வாரியம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. பள்ளியில் படிக்கும் மாணவர்கள் படிக்கும் பொழுதே கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்வதற்கு ஏற்றவாறு கல்வி முறை இருக்க வேண்டும். கிராமங்களை வளமாக்கக் குடிசைத் தொழில் மூலம் கிடைக்கும் பொருளைப் பயன்படுத்துவோம். நாட்டினை ஏற்றமுறச் செய்வோம்.

– த. ஆதிலட்சுமி

## செயல்பாடுகள்

- இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள குடிசைத் தொழில்களைக் கண்டுபிடித்துக் குறிப்பேட்டில் எழுதுங்கள்.
- குடிசைத் தொழில் செய்வதனால் ஏற்படும் நன்மைகள் என்ன என்பதைக் கலந்துரையாடிக் குறிப்பு தயாரியுங்கள்.
- ஆசிரியருடன் கலந்துரையாடிக் குடிசைத்தொழில், சுயதொழில் இவற்றின் வேறுபாடுகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

| குடிசைத் தொழில் | சுயதொழில் |
|---|---|
| | |

- உங்களுக்கு விருப்பமான ஏதாவது ஒரு குடிசைத்தொழில் பற்றிய தகவல்களைத் திரட்டிக் கட்டுரையாக வெளியிடுங்கள்
- பாடப்பகுதியில் கூறப்பட்டுள்ள குடிசைத் தொழில்களைப் பட்டியலிடுங்கள்.
    - கால்நடை வளர்த்தல்
    - 
    - 

- பொருள் காணலாம்
  - வினைஞர்
  - நல்கி
  - காலணி
  - மலிவு
  - கைத்தறி
- பிரித்தெழுதுங்கள்
  - வீட்டிலுள்ளோர்
  - பலவாயினும்
  - உனக்கில்லை
  - சாத்தியமல்ல

## மண்ணிலே கலைவண்ணம்



மண்பாண்டக்கலை மிகச்சிறந்த கலையாகும். கலையழகுடன் கைத்திறனையும் காட்டி மண்பாண்டம் செய்வதையே கலையாக்கிவிட்டனர். உருவ அமைப்பில் மாற்றம் செய்து கலையழகுடன் பொருந்திய பொருட்களை உருவாக்குகின்றனர். பண்டைய வேலைத்திறனுடனும் இன்றைய கலைக் கண்ணோட்டத்துடனும் களிமண்ணால் செய்யப்படுகின்றன. மண்பாண்டம் செய்ததை மனிதநாகரிகத் தொடக்க காலம் என்பர். டாக்டர் வைத்தியநாத் சரஸ்வதி இத்துறை பற்றி ஆய்வு செய்த முன்னோடியாவார். ஸ்டீபன் இங்கிலீஸ் (Stephen English) மண்பாண்டம் செய்தலைப் பற்றியும் அய்யனார் போன்ற தெய்வங்களை உருவாக்குதல் பற்றியும் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். குயவர்கள் இன்று பழமையான வடிவ அமைப்போடு சித்திர வேலைப்பாடு கொண்ட பல பொருட்களை மண்ணால் உருவாக்குகின்றனர்.



மண்பாண்டம் செய்யும் தொழில் மிக முக்கிய கைவினைத் தொழிலாகக் கருதப்படுகின்றது. மண்பாண்டம் செய்வதை இரண்டாகப் பிரிக்கலாம்: 1. மண்பாண்டம் செய்தல் 2. சுடுமண் பாண்டப் பொருட்கள் செய்தல். மண்பாண்டம் செய்தல் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தோன்றியது என்பர். ஆரம்ப காலக்கட்டத்தில் கையாலே மண்பாண்டங்கள் செய்யப்பட்டன. மண்பாண்டம் செய்யும் சக்கரம் அக்காலக் கட்டத்தில் தோன்றவில்லை. மண்பாண்டம் செய்யும் சக்கரம் புதிய கற்காலத்தில்தான் தோன்றியிருக்க வேண்டும். ஆரம்பத்தில் கையால் உருவாக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கும் சக்கரத்தால் உருவாக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கும் அதிக வேறுபாடில்லை. மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகத்தை நோக்கினும் மண்பாண்டக்கலை சிறந்து விளங்கியுள்ளதைக் காண்கிறோம். மண்பாண்டக்கலை இந்தியா முழுவதும் சிறந்து விளங்கியுள்ளது. காலப்போக்கில் அலங்கரிக்கப்பட்ட மண்பாண்டங்களுக்கு மிக முக்கியத்துவம் தரப்பட்டது. மக்களின் தேவைக்கேற்ப உற்பத்தியும் பெருகியது. வண்ணங்கள் பூசுவதைப் பெருங்கலையாகக் கொண்டனர். சுடுமண் பொருள்களால் ஆக்கப்பட்ட மனித உருவங்கள், விலங்கு உருவங்கள், பொம்மைகள் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டன. சமுதாயம் சமூகப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்த காலக்கட்டத்தில் சுடுமண் பொருட்களின் உற்பத்தி பெருகியது எனக் கூறலாம். மண்பாண்டம் செய்தல் மூலம் மனிதனின் கைத்திறனையும் தொழில் நுட்பத்தினையும் அழகுணர்ச்சியையும் ஒருங்கே காணமுடிகிறது.

தமிழக மக்கள் செய்யும் கைவினைப் பொருட்களைக் கண்டு உலகமே வியந்து பாராட்டுகின்றது. கல்சிற்ப வேலைப்பாடு. உலோக சிற்ப வேலைப்பாடு, மர வேலைப்பாடு உலகில் அனைவரது கவனத்தையும் ஈர்க்கின்றது. அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பல பொருட்களிலும் அழகுணர்ச்சியையும் தொழில் நுட்பத்தையும்

காண்கிறோம். அன்று கண்ட தொழில்நுட்பம் இன்று பல இயந்திர வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது. நாட்டுப்புறத் தொழில்நுட்பம் பற்றிய ஆய்வுகள் பெருகின், பண்டைய மனிதன் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தொழில் மதிநுட்பத்தை எவ்வாறு வளர்த்து வந்துள்ளான் என்பதையும் இன்றைய அறிவியல் இயந்திர வளர்ச்சிக்கு அது அடிப்படையாக இருந்துள்ளது என்பதையும் உணரலாம்.

– டாக்டர் சு.சக்திவேல்

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசித்துப் பொருள் அறிந்து குறிப்பு எழுதுங்கள்.
- மண்பாண்டம் வனைதல் முறையை விளக்கவும்.
- மண்பாண்டம் செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்களின் பெயர்களை எழுதுங்கள்.
- பிரித்தெழுதுக
  - அழகுணர்ச்சி
  - தேவைக்கேற்ப
  - வேலைத்திறன்
  - கலையழகு
- எதிர்ச் சொற்களைக் காணலாம்
  - பழமை
  - கற்காலம்
  - ஆரம்பம்
  - தோற்றம்
- பாடப்பகுதியை வாசித்துக் கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

  மண் பாண்டக் கலையில் மனிதன் ............................., ........................, ........................................................ காணமுடிகிறது.
- சிறுகுறிப்பு எழுதுங்கள்

  கைவினைப் பொருட்கள்



# செய்யும் தொழிலே தெய்வம்



## பாட்டாளி

பாட்டாளி முதலாளி யாவரும் ஒன்றே ;
பங்கிட்டுச் சரிபாதி அடைகுவம் நன்றே;
நாட்டில் விளைபொருள் வான்தந்த செல்வம்;
நாமொன்றாய் உடுத்துண்டே உயிர்வாழல் இன்பம்

கடுமழை வெய்யிலில் உழைத்தவர் யாரோ?
காய்கறி நெல்கூலம் விளைத்தவர் யாரோ?
குடிநீர் நிறைகூவம் சமைத்தவர் யாரோ?
கூடை குடிசை முடைந்தவர் யாரோ ?

குளிர் நீக்கப் பலஆடை நெய்தகை யார்கை?
கோட்டை மதில்சுவர் செய்தகை யார்கை?
களியானை மிடறேறி நாட்டினைக் காக்கக்
கைவேலும் வாளும் கொடுத்தகை யார்கை?

பலபல அழகாடை தைத்தகை எவர்கை?
பதஞ்செய்து தோலினைத் தைத்தகை எவர்கை?
மலைகாடு பாய்ந்தோடும் புகைவண்டி ஊர்தி
வரப்போகப் பெரும்பாட்டை ஆக்கிய தார்கை ?

அழுக்காடை தூய்மைப் படுத்திய தார்தோள்?
ஆற்றணை கட்டிநீர் தேக்கிய தார்தோள்?

முழுமீசை அரைமீசை தாடி யொதுக்கி
முகத்தில் அழகையுண் டாக்கிய தார்கை?

பொன்னை யுருக்கி அணிசெய்த தார்கை?
பொங்கும் கடல் தாண்டச் செய்தகை யார்கை ?
அந்நிய நாட்டினர் பேச்சை நொடியில்
அட்டியின்றிக் கேட்கச் செய்தகை எவர்கை ?

வாணிதாசன்

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பிறப்பு | : | ஜூலை 22, 1915 |
| தந்தை | : | திருக்காமு |
| தாய் | : | துளசியம்மாள் |
| ஊர் | : | வில்லியனூர், புதுச்சேரி |
| துணைவி | : | ஆதிலெட்சுமி |
| புனைப்பெயர் | : | ரமி |
| பட்டங்கள் | : | கவிஞரேறு, பாவலர் மணி |
| விருது | : | செவாலியர் (பிரெஞ்சு நாட்டு விருது) |
| நூல்கள் | : | தொடுவானம் ,எழிலோவியம், குழந்தை இலக்கியம், வாணிதாசன் கவிதைகள். |
| இறப்பு | : | 7 ஆகஸ்ட் 1974 |

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடப்பகுதியை வாசித்து விடை எழுதுங்கள்.
  - பொன்னை உருக்கி அணிகலன்கள் செய்பவர் யார் என எழுதுங்கள்?
  - மழையிலும் வெயிலிலும் கடினமாக உழைத்துக் காய்கறிகளை உற்பத்தி செய்பவர்கள் யார் என எழுதுங்கள்?
- இப்பாடலில் பிடித்தமான வரிகள் எவை? பிடிப்பதற்கான காரணத்தையும் எழுதுங்கள்.
- முதலெழுத்து ஒன்று போல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- இப்பாடலில் வரும் கைத்தொழில்களை வரிசைப்படுத்துங்கள்.
- பாடலை உரைநடையாக மாற்றி எழுதுங்கள்.

## நெசவு

உயர்ந்த தொழில்களில் ஒன்றாக நெசவு கருதப்படுகிறது. முற்காலத்தில் வள்ளுவர் கூட நெசவுத் தொழில் செய்ததாகக் கதை கூறுகிறது. 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' என்பார்கள். மனிதர்களின் மானத்தைக் காப்பது நெசவுத் தொழில் ஆகும்.



பண்டைக் காலத்தில் நம் நாட்டில் நெசவுத் தொழில் சிறந்திருந்தது. "பட்டினும், மயிரினும், பருத்தி நூலினும், ஆடைகள் நெய்யப்பட்டன. பாலாடையைப் போன்றும், பாலாவியைப் போன்றும் மென்மையான ஆடைகள் உண்டாக்கப்பட்டன. "ஆவியன்ன அவிர் துகில்" என்ற தொடர் அவ்வுண்மையை விளக்கும்.

முற்காலத்தில் நம் நாட்டின் மெல்லிய ஆடைகள் எகிப்து, ரோம், பாரசீகம், சீனா முதலிய நாடுகளுக்கும் பெரிதும் ஏற்றுமதி செய்யப்பட்டன. அதனால் நமக்கு நல்ல வருவாய் கிடைத்தது.

இப்பொழுதும் நம் நாட்டிலிருந்து ஏராளமான ஆடைகளும், நூலும், பஞ்சும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நம் நாட்டின் காஞ்சிச் சரிகைச் சேலைகளுக்கும், காஷ்மீர் கம்பளங்களுக்கும்,

காசிப் பட்டுக்கும் "பிளீடிங் மெட்ராஸ்" துணிக்கும் வெளி நாடுகளில் அதிகம் தேவை இருக்கிறது.



ஆடைகள் கைத்தறிகளிலும், ஆலைகளிலும் நெய்யப்படுகின்றன. இவற்றுக்கிடையே போட்டியும் அழிவும் இல்லாமல் அரசாங்கம் பாதுகாக்கிறது. கைத்தறி நெசவாளர்கள் நாடெங்கும் பரவி இருக்கின்றனர். ஆலைகளும் ஊருக்கூரு தோன்றி வருகின்றன. இவற்றால் நெசவுத் தொழில் விரைந்து வளர்கிறது.

நெசவு நம் நாட்டிற்கு நல்ல வருமானத்தைப் பெற்றுத் தருகிறது. அதனைக் கலை முறையில் கவர்ச்சிகரமாக வளர்க்க வேண்டியது நமது கடமையாகும்.

வாழ்க தமிழ்! வளர்க நெசவு!

– கவிஞர் அரு.சோமசுந்தரன்



## செயல்பாடுகள்

- சேர்த்து எழுதுக
  - பண்டை + காலத்தில் = பண்டைக்காலத்தில்
  - பால் + ஆடை
  - முன் + காலம்
- ஆடைகள் எவற்றிலிருந்து நெய்யப்படுகின்றன?
- முற்காலத்தில் நமது நாட்டு ஆடைகளை ஏற்றுமதி செய்த பிற நாடுகள் எவை? என எழுதுங்கள்?

### வினையெச்சம்

வினைச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சச்சொல் வினையெச்சம் எனப்படும்.

| | | |
|---|---|---|
| தோழி 1 | : | நேற்று நடந்த பேச்சுப் போட்டியில் கபிலன் எப்படிப் பேசினான்? |
| தோழி 2 | : | நன்றாகப் பேசினான். ஆனால் சில தவறுகள் இருந்ததால் அவனுக்கு முதல் பரிசு கிடைக்கவில்லை. |
| தோழி 1 | : | என்ன தவறு செய்தான்? சொல்லு பார்க்கலாம். |
| தோழி 2 | : | சொல்கிறேன் கேள்.<br>1. ஒலிவாங்கி (Mike) பிடித்துப் பேசினான்.<br>2. எழுதி வந்த குறிப்புகளைப் பார்த்துப் பேசினான் |
| தோழி 1 | : | என்ன நீ வினையெச்சச் சொல்லை வச்சே பேசிகிட்டிருக்கிற? |
| தோழி 2 | : | என்ன வினையெச்சமா? அப்படின்னா என்ன? |
| தோழி 1 | : | ஓ அதுவா .... வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்ச வினைகளை வினையெச்சம் அப்படினு சொல்லுவாங்க |
| தோழி 2 | : | அப்படினா? தெளிவா சொல் புரிந்து கொள்கிறேன். |
| தோழி 1 | : | கபிலன் பேசும் போது மைக்கைப் பிடித்துப் பேசினான், பார்த்துப் பேசினான், என்று சொல்லும் தொடர்களில் 'பிடித்து', 'பார்த்து' என்ற சொற்கள் வினையெச்சங்களாகும்?<br>'பிடித்து', 'பார்த்து' ஆகிய சொற்கள் வினையை முடிக்காமல் எச்சமாக நிற்கின்றன. ஆனால் அதனைத் தொடர்ந்து வரும் பேசினான் என்ற வினைமுற்றுச் சொல் அந்த எச்சங்களை நிறைவுப் பெறச் செய்கின்றன. இதுதான் வினையெச்சம். |
| தோழி 2 | : | ஓ ....ஓ ... இப்ப புரிஞ்சுது |

# நவீனத்தொழில்கள்



## தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!
பெரும்புகழ் நுமக்கே யிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!

மண்ணெடுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே
பரத நாட்டியக் கூத்திடு வீரே!

காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே!
தேட்டமின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே!

– மகாகவி பாரதி

## ஆசிரியர் குறிப்பு



1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி எட்டையபுரம் என்ற இடத்தில் பிறந்தார். தந்தை சின்னச்சாமி ஐயர், தாயார் லட்சுமி அம்மாள். இயற்பெயர் சுப்ரமணியன். பாரதி என்பது எட்டையபுரம் மன்னர் அளித்த பெயராகும். விடுதலைக்காகப் போராடிய தேசியக் கவிஞர். இவர் மகாகவி என்றும் அழைக்கப்படுகிறார். குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவை இவரது முப்பெரும் பாடல்கள். 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் நாள் காலமானார்.

### செயல்பாடுகள்

- பாடலை வாசித்துப் புதிய சொற்களைத் தொகுத்து எழுதுங்கள்.
- பாடலில் வரும் தொழில்களை வரிசைப்படுத்துங்கள்.
- பாடலை உரைநடை வடிவில் மாற்றி எழுதுங்கள்.
- ஆசிரியர் குறிப்பு தயாரியுங்கள்.

## உழைப்பால் உயர்ந்தவர்

பம்பாயில் இருந்து வெறும் கையோடு வந்த அந்த இளைஞனுக்கு உதவ யாரும் முன்வரவில்லை. எனவே சொந்த தொழிலை விட்டு, யாரிடமாவது வேலைக்குச் சேர முன்வந்து, கோயமுத்தூரில் மோட்டார் வண்டி வியாபாரம் செய்த "சர் இராபர்ட் ஸ்டேன்ஸ்" என்பவரிடம் வேலைக்குச் சென்றார். ஆனால் அதற்கு அவர், "இங்கு வேலை காலி இல்லை. ஆனால் உனக்கு ஒன்று சொல்கிறேன். உன் திறமை வீணாகக் கூடாது; நீ உனது பஞ்சுத் தொழிலை விட்டுவிட்டு, வேறு தொழில் செய். உதாரணமாக ஒரு மோட்டார் பஸ் வாங்கி வாடகைக்கு ஓட்டு வேண்டுமானால் நாலாயிரம் ரூபாய் நான் கடன் தருகிறேன். மேலும் நாலாயிரம் ரூபாயை நீ தயார் செய்துகொள்" என்றார். அதன்படியே நண்பர்களின் உதவியோடு, இவர் ஒரு பேருந்தை (பஸ்) கடன் மூலம் வாங்கினார் இவரே ஜி.டி நாயுடு.

அப்போது கோயமுத்தூரில் அதிபராக இருந்த தேவக்கோட்டையைச் சேர்ந்த பி.எஸ். சோமசுந்தரம் என்பவர், ஜி.டி.நாயுடுவிடம், "தம்பி! எந்தத் தொழிலாக இருந்தாலும், பாதியை முதலுக்குப் போட்டுவிட்டு, எஞ்சிய பாதியை அந்த முதலின் பாதுகாப்புக்காகக் கையில் வைத்துக்கொள்" என்றார். அதன்படியே ஜி.டி. நாயுடுவும் நடந்து கொண்டார்.


ST-327-9-TAMIL(AT)-7-VOL-1

1920–ஆம் ஆண்டில் ஒருநாள் ஜி.டி.நாயுடுவின் பேருந்து பொள்ளாச்சியிலிருந்து பழநிக்கு முதன்முதலாக ஓடத் தொடங்கியது. அந்தப் பேருந்துக்கு முதலாளியும் ஜி.டி.நாயுடுதான், ஓட்டுநரும் ஜி.டி. நாயுடுதான். இதன் மூலம் அவருக்கு நல்ல வருவாய் கிடைத்தது. பல தொழிலில் நஷ்டம் அடைந்ததால் ஜி.டி. நாயுடு இந்தத் தொழிலில், எச்சரிக்கையாகவும், சிக்கனமாகவும் செயல்பட்டு, தனது கடன்களை எல்லாம் அடைத்தார். புதிய, புதிய பேருந்துகளை வாங்கினார். பொறுப்புமிக்க ஆட்களை வேலைக்குச் சேர்த்தார். மீண்டும் பணக்காரர் ஆனார்.

சாதாரண மனிதராக வந்து திறமைமிக்க "மோட்டார் மன்னர்" என்று பெயரெடுக்கும் அளவிற்கு இந்தத் துறையில் சிறந்த வல்லுநராக மாறினார் ஜி.டி. நாயுடு. இவரது பேருந்துகள் கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள எல்லா சாலைகளிலும் ஓடியதோடு மட்டுமல்லாது நீலகிரி, மதுரை, திருவாங்கூர், கொச்சி என எல்லா பகுதிகளிலும் ஓடின. இந்தக் காலகட்டத்தில் 1933–ஆம் வருடத்தில் மோட்டார் தொழிலில் பெரும் போட்டி ஏற்பட்டது. சிறுசிறு பஸ் சொந்தக்காரர்கள் எல்லாம் வீழ்ச்சியுற்றனர். சிறுகச்சிறுக மோட்டார் தொழில் நசிந்து வந்தது. இது நாயுடுவுக்கு மிகவும் வருத்தத்தை தந்தது. இந்தச் சமயத்தில் அவர் பஸ் சொந்தக்காரர்கள் அனைவரையும் ஒரு மாநாட்டுக்கு அழைத்தார்.

எல்லா கம்பெனிகளையும் ஒன்றிணைத்து, "யுனைடெட் மோட்டார் சர்வீஸ் (யு.எம்.எஸ்.)" என்ற ஐக்கிய நிறுவனத்தை ஏற்படுத்தினார். முதலீட்டு விகிதப்படி இலாபத்தைப் பிரித்துக் கொடுத்தார். இதனால் தேவையற்ற போட்டியை ஒழித்ததோடு கூட்டுறவு முறையில் மோட்டார் தொழிலை ஏற்படுத்தி புரட்சியைச் செய்தார் ஜி.டி. நாயுடு. இந்த நிறுவனத்தில் இருநூற்றுக்கும் மேற்பட்ட பேருந்துகள் ஓடின. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இந்த வண்டிகள் ஓடிய சாலைகளின் நீளம் 15 ஆயிரம் மைல்கள் ஆகும். இவற்றில் தினசரி 10 ஆயிரம் மக்கள் பயணம் செய்தனர். இந்த யு.எம்.எஸ். போக்குவரத்து நிறுவனம் மக்களுக்குச் செய்த நன்மைகள் கணக்கில் அடங்காதவை. பேருந்தில், மக்கள் உட்காருவதற்குரிய இடவசதி, பணியாட்கள், பிரயாணிகளிடம் அன்பாக நடந்துகொண்ட முறை, தங்குமிடத்தில் பயணிகளுக்குச் செய்யப்பட்டு இருந்த வசதிகள் என ஜி.டி.நாயுடு அவர்கள் சிறப்புற செய்து இருந்தார். இவரது பேருந்துகளில் வேலை பார்க்கும் பணியாளர்கள், பிரயாணிகளிடம்





அன்பாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டும். பிரயாணிகள் தவறுதலாக நடந்து கொண்டாலும்கூட, பொறுமையாக இருக்க வேண்டும் என்பது ஜி.டி.நாயுடு அவர்களின் கட்டளை. அதையும் மீறி நடந்து கொண்டால் உடனே பணிநீக்கம் செய்யப்படுவார்கள். ஒருமுறை மாறுவேடத்தில் தனது பஸ்ஸில் பயணம் செய்த ஜி.டி. நாயுடு தனது பணியாட்களுடைய நடத்தையைச் சோதிப்பதற்காக, ஒரு மனிதரைவிட்டு, பஸ் கண்டக்டரின் கன்னத்தில் அறையச் செய்தார். ஆனால் அந்தக் கண்டக்டரோ தனது விதிமுறைக்கு ஏற்ப பொறுமையாகவே நடந்து கொண்டார். இதைப் பார்த்த ஜி.டி.நாயுடு அந்தக் கண்டக்டரைப் பாராட்டி, ஊதிய உயர்வும் அளித்தார்.

ஒருமுறை ஜி.டி.நாயுடு அவர்களிடம் வேலைதேடி ஓர் இளைஞர் வந்தார். அவருக்கு ஒரு புதுமையான வேலையைத் தந்தார் ஜி.டி. நாயுடு. அந்த வேலை என்ன தெரியுமா? நாள்தோறும் காலை ஏழுமணிக்கு ஏதாவது ஒரு பேருந்தில் ஏறி விரும்புகின்ற தூரம் வரை செல்ல வேண்டியது. பிறகு வழியில் வரும் வேறொரு பேருந்தில் ஏறி செல்வது. இப்படியாக அவர் விரும்பும் யு.எம்.எஸ். பேருந்துகளில் நாள் முழுவதும் பயணம் செய்து, இரவு ஏழு மணிக்கு ஜி.டி. நாயுடுவை அவரது அலுவலகத்தில் தவறாமல் சந்திக்க வேண்டும். இப்படி ஒரு புதுமையான வேலையைக் கொடுத்து, அவர் யு.எம்.எஸ். பஸ்களில் செல்வதற்கு இலவச பயணச்சீட்டும் கொடுத்து இருந்தார். அதன்படி அவர் நாள்தோறும் பல யு.எம்.எஸ். பஸ்களில் பயணம் செய்து வந்தார். ஆனால் அவர் யாருடனும் பேசக்கூடாது என்பது ஜி.டி. நாயுடுவின் கட்டளை. இவ்வாறு செய்து வந்த அந்த இளைஞர் இரவு ஏழு மணிக்கு ஜி.டி. நாயுடுவின் அலுவலகத்திற்கு வந்துவிடுவார். அவரைப் பத்து நிமிடம் தன் அறையில் வைத்துவிட்டு பின் அந்த இளைஞரை வீட்டிற்குப் போகச் சொல்வார் ஜி.டி. நாயுடு. அவருடன் எதுவும் பேசமாட்டார் ஜி.டி. நாயுடு. ஒருமாத காலம் இந்த நிலை நீடித்தது. மறுமாதம் முதல் யு.எம்.எஸ். பேருந்து நிறுவன வசூல் 15 சதவீதம் அதிகரித்தது. அதற்குக் காரணம் இந்த இளைஞர் ஒரு சோதனையாளர் எனப் பேருந்துத் தொழிலாளர்கள் நினைத்ததே ஆகும். அதுமுதல் யு.எம்.எஸ். நிறுவனத்தின் தூய்மை அதிகரித்தது. ஓர் இளைஞர் மூலம் ஒரு சோதனை செய்து அதில் வெற்றியும் கண்டார் ஜி.டி. நாயுடு.

தமிழ்நாட்டின் 'ஹென்றிபோர்டு' என அழைக்கப்பட்ட ஜி.டி.நாயுடு, அவரைப் போலவே தனது நிறுவனத்தில் வேலைபார்க்கும், ஒவ்வொரு தொழிலாளி பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருந்தார். ஒருநாள் திடீரென அவர் அலுவலகத்திற்குச் சென்ற அன்று பலர் விடுப்பு எடுத்து வேலைக்கு வரவில்லை; பலர் விடுப்பு எடுக்காமல் வரவில்லை; பலர் தாமதமாக வந்தனர். இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த ஜி.டி.நாயுடு அன்று முதல் தனது வேலைக்காரர்களின் வருகைப் பட்டியலை நாள்தோறும் குறித்த நேரத்தில் தம் பார்வைக்குக் கொண்டுவரச் செய்தார். மேலும் தவறி நடப்பவர்களுக்குத் தண்டனையும் வழங்கினார். இதனால் தொழிலாளர்களுக்குப் பொறுப்புணர்ச்சி ஏற்பட்டது. பின்பு வேலைக்கு ஒழுங்காக வந்தார்கள். இதன் பிறகு ஜி.டி. நாயுடு ஒரு புதுக்கட்டளையைப் பிறப்பித்தார். "உடல்நலம் இல்லாமல் யாரும் வேலை பார்க்கக் கூடாது. மீறி பார்த்தால் அவர்களுக்குப் பத்து ரூபாய் அபராதம் விதிக்கப்படும்" என்பதே அந்தக் கட்டளை. இவ்வாறு ஜி.டி. நாயுடு தனது தொழிலாளர்களிடம் அன்பாகவும் கண்டிப்பாகவும் நடந்து கொண்டதால்தான் அவரது நிறுவனம் சிறப்புற வளர்ந்தது.

ஒருசமயம் இரவு நேரத்தில் தனது அலுவலகத்தைப் பார்வையிட வந்தார் ஜி.டி. நாயுடு. அப்போது தனது கம்பெனிச் செயலாளரின் மேஜையின் மீது, அலுவலக பைல்களும், காகிதங்களும் அலங்கோலமாகச் சிதறிக் கிடந்தன. அவற்றை எல்லாம் ஒழுங்காக அடுக்கியும் கட்டியும் வைத்தார். பிறகு ஒரு துண்டுச் சீட்டில், "நீங்கள் மேசைகளைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்துக் கொள்ளப் போகிறீர்களா? அல்லது உங்கள் முதலாளியைத் தினமும் இரவில் வந்து இதுமாதிரி தூய்மை செய்யச் சொல்கிறீர்களா?' என எழுதி வைத்துவிட்டு வந்தார். மறுநாள் அலுவலகம் வந்த செயலாளர், முதலாளி ஜி.டி. நாயுடுவின் துண்டுச் சீட்டைக் கண்டு அதிர்ச்சியுற்று, தனது தவறுக்கு வருந்தி, அன்று முதல் தனது அலுவலகத்தைச் சுத்தமாக வைத்திருந்தார்.

– எடையூர் சிவமதி.

## வாசிப்போம்; கண்டறிவோம்

- ஜி.டி.நாயுடு முதன் முதலில் செய்த வேலை?
- ஜி.டி நாயுடுவின் முதல் பேருந்து எங்கிருந்து எங்கு இயக்கப்பட்டது?
- 1933–இல் அமைத்த மோட்டார் கம்பனியின் பெயர்?

## செயல்பாடுகள்

- ஒரு தொழிலதிபரிடம் பேட்டி காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- உங்கள் பகுதியில் உழைப்பால் உயர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு வாழ்த்துக் கடிதம் எழுதுங்கள்.

- தொழில் – என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்ற ஒரு சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.

## வானத்தில் ஒரு தொழிற்சாலை

தொழிற்சாலை என்றால் நாம் வாழும் பூமியில் ஒரு நாட்டின் ஏதோ ஒரு நகரத்தில் அல்லது கிராமத்தில் அமைந்திருக்கும் என்பது தானே இதுவரை நாம் அறிந்திருக்கும் வரலாறு!

ஆனால் இந்த வரலாற்று உண்மையையும் மாற்றிப் புதிய வரலாறு படைத்துள்ளது சோவியத் ரஷ்யா.

1987 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சோவியத் ரஷ்யா ஒரு புதிய தொழிற்சாலையை ஒரு புதிய இடத்தில் அமைத்துள்ளது. எங்கு தெரியுமா? வானத்தில்.

புவியீர்ப்பு விசையில்லாத இடத்தில் மட்டுமே எளிதாகத் தயாரிக்கக் கூடிய புறஊதாக் கதிர்கள், லேசர் கருவிகள் மற்றும் நுட்பமான மின்னணுச் சாதனங்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்படுகிற செமி கண்டக்டர், மோனோ கிறிஸ்டல்களைத் தயாரிப்பதற்காகவே இந்த ஆகாயத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதே பொருட்களைப் பூமியிலேயே தயாரிக்கலாம் என்றாலும் உற்பத்திச் செலவு அதிகமாகிறது.

தொழிற்சாலை என்றால் கல்லாலும் சிமெண்டாலும் கட்டப்பட்டக் கட்டடத்தில் அமைந்ததல்ல அது. 136 கிலோ எடையுள்ள ஓர் எந்திரம் புவியீர்ப்பு விசை எல்லையைத் தாண்டி மிதந்து கொண்டுள்ளது.

அந்தத் தொழிற்சாலையை அமைக்கக் காரணமாக இருந்தவர்கள் ரஷ்ய விண்வெளி வீரர்களான யூரிரோமனென்கோ மற்றும் அலெக்ஸாண்டர் லாவேஸ்கின் ஆகியோராவர்.

அப்படியென்றால் இனி தொழிற்சாலை எந்த நாட்டில் என்று கூடக் கேட்க முடியாது. தொழிற்சாலை மண்ணில் உள்ளதா? விண்ணில் உள்ளதா? என்பதே முதல் கேள்வியாக அமைய வேண்டும் போலும்.




### செயல்பாடுகள்

- சோவியத் ரஷ்யா விண்வெளி ஆய்வுக்கூடம் அமைக்கக் காரணம் என்ன?
- விண்வெளி ஆய்வுக்கூடம் அமைக்கக் காரணமானவர்கள் யார்?
- தற்காலத்தில் உள்ள விண்வெளி ஆய்வுமையங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி கட்டுரை எழுதுங்கள்.

# அகரமுதலி

| | | |
|---|---|---|
| அட்டல் | – | காய்ச்சுதல் |
| அபராதம் | – | தண்டனை |
| அறநெறி | – | தர்ம மார்க்கம் |
| ஆவல் | – | ஆசை |
| இமையவர் | – | தேவர்கள் |
| இழுக்கு | – | குற்றம், தாழ்வு |
| ஊண் | – | உணவு |
| எய்யாமை | – | அறியாமை |
| கபளீகரம் | – | ஏமாற்றுதல் |
| கலயம் | – | குடம் |
| காலணி | – | செருப்பு |
| கைத்தறி | – | கையால் நெய்யப்படும் நெசவு |
| கிராக்கி | – | அதிக மதிப்பு பெறுதல் |
| கிளர்ச்சி | – | புரட்சி |
| குடித்தனம் | – | இல்வாழ்க்கை |
| குயவர் | – | மண்பாண்டங்கள் செய்பவர் |
| கூடம் | – | வீட்டின் தாழ்வாரம் |
| சம்பாத்யம் | – | வருமானம் |
| சாலவும் | – | மிகவும் |
| சிதைக்கும் | – | அழிக்கும் |
| சிபாரிசு | – | பரிந்துரை |
| சூளுரைத்தல் | – | சபதம் செய்தல் |
| செம்மை | – | ஒழுங்கு |
| செயற்கரிய | – | அரிய செயல் |
| டி வி | – | தொலைக்காட்சி |
| தடங்கல் | – | தடை |
| தரணி | – | பூமி/ உலகம் / பார் |
| திடுமென | – | திடீரென்று. |
| தீஞ்சுவை | – | இனியசுவை |
| துகில் | – | ஆடை |
| தூய | – | சுத்தமான |
| தேட்டம் | – | தேடல் |
| தொழுதல் | – | வணங்குதல் |
| தோகை | – | சிறகு |
| நசிந்து | – | குறைந்து/ எண்ணிக்கையில் குறைந்து அழியும் நிலை |
| நஞ்சு | – | விஷம் |
| நண்பு | – | நட்பு |
| நல்கி | – | கொடுத்து |
| நெறிப்படுத்துதல் | – | ஒழுங்குபடுத்துதல் |
| பிரசித்தி | – | புகழ் |
| பிளாஸ்டிக் | – | நெகிழி |
| பெண்டு | – | பெண் |
| மதிநுட்பம் | – | கூர்மையான அறிவு, அனுபவ அறிவு |
| மலிவு | – | விலை குறைந்த |
| மாடம் | – | வீட்டின் மேற்கூரை மேல் பகுதி |
| மீட்டிங் | – | கூட்டம் |
| மொய் | – | வலிமை |
| மெய் | – | உண்மை |
| வணிகம் | – | வியாபாரம் |
| வறுமை | – | துன்பம் |
| விண் | – | ஆகாயம் / வானம் |
| வினைஞர் | – | தொழிலில் சிறந்தவர் |
| விழைவு | – | விருப்பம் |
| வெற்பு | – | மலை |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப்பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற்குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக்கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற்கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12. தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring*** *: www.nireekshana.org.in*